MASTER NEGATIVE NUMBER

6121.8

வைசியமித்திரன்

புத்தகம் 1, இலக்கம் 10

September 04, 1911

Record no. 1102

Vaiciyamittiran
Puttakam 1, ilakkam 10
September 04, 1911

Record no. 1102

REG. NO. M.—940.

சிவமயம்.
வேலுமயிலுந்துணை.

வைசியமித்திரன்

THE VYSIA MITRAN.

பிரதி சோமவாரமும் பிரசுரிக்கப்பெறும்.

புத்தகம் 1] தேவகோட்டை. விரோதிகிருதுஸூ ஆவணிமீ 19உ (4-9-1911) [இலக்கம் 10

அமராவதிபுத்தூர், வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியாரவர்கள் அபிப்பிராயம்.

அருமை வைசியமித்திரன் பத்திராதிபர்கட்கு,

நமது பத்திரிகையைக் கண்ணுற்றுக் கண்ணுற்றுப் பேருவகைக் கடலிற் றிளைத்துள்ளேன்.

ஆண்டினின் மிக்க விளமையும் அறிவினின் மிக்க முதுமையும் பெற்ற இஃதொப்பதெங்கணும் யாண்டுங் காண்டற்கரிதேயாம். நமது வாழ்க்கைப் பதியாகிய தேவையிற் றோன்றியதாத லினதனதிகுதியாக, நமது வைசிய ஜாதியார்களேயன்றி, மற்றையோரெவ்வொருவருக்கும் பல வகையானு மிப்பத்திரிகை தேவையேயென்பது நன்கு விளங்குகின்றது. இங்ஙனம் உலகோபகாரம் புரிந்த இராம இலக்குமணர்களாகிய சகோதரர் தீவிரிருவிரும், பண்டைக்காலத்திய இராம இலக்குமணர்கள் போன்றும், நமது வைசியமித்திரன், அன்னோர்களின் மித்திரர்களாகிய விபீஷண ஆஞ்சனேயர் முதலானவர்கள் போன்றும் நீடூழி வாழ எல்லாம் வல்ல பரமேசுரனைப் பல்லாயிரந் தரம் பிரார்த்திக்கின்றேன். இங்ஙனம்,

வயி. நாக. ராம. அ. இராமநாதன்செட்டி.

விரோதிகிருது ஸூ
ஆவணிமீ 9உ

வைசியமித்திரனது சாற்றுக் கவிகள்.

இராமநாதபுரம், சிவகங்கை, சமஸ்தான மகாவித்வான் ஜவ்வாதுப் புலவரவர்களின் ஐந்தாவது பௌத்திரர் முகம்மதுமீர் ஜவ்வாதுப் புலவர் அவர்களியற்றிய அறுசீர் விருத்தம்.

பன்னாளும் புரிந்த பெருந்தவப்பயனே
வைசியர்க்குப் பரந்த சீர்த்தி
யென்னாளு நிலைத்தவர் செய் யறமனைத்தும்
பெருக முயன்றிடுதற்கின்னே
நன்னாளென் றெழுந்தனனிவ் வைசியமித்
திரனென்பா னல்லோர் போற்று
மின்னாள்போ லினைவருக்கும் பொதுநலந்தந்
தேர்ங்கவரு ளெம்பிரானே.

கும்பகோணம் வண்டுவாஞ்சேரி உபாத்தியாயர் கோவிந்தசாமி நாயுடு அவர்கள் குமாரரும், ரெங்கோன் முதலியார் சபா ஸ்தாபகருமாகிய நாராயணசாமி நாயுடு அவர்களியற்றிய அறுசீர்விருத்தம்.

குலமுன் வணிகருளக் குறிப்புணர்முக்
கண்கடவுள் கொடுக்கு மாசி
நலந்திரண்டிங் கிலகுதோன்றி வைசியமித்
திரனென்றோர் நாமந் தாங்கி
நலந்தருநன் னெறியனைத்தும் புகட்டவெளி
புறப்பட்டான் புலவரோத்தி
வலந்தருமக் கருமுகிலே யென்நாளு
மவனோங்கி வளர்தல் செய்வான்

நமது வணிகர்களும் மாங்கல்ய தாரணமும்.

1. அந்தணர்கட்குக் குசையும், அரசர்கட்கு ஆயுதமும், வைசியர்கட்குத் துலாக்கோலும், சூத்திரர்கட்கு மேழியும் எவ்வாறு சிறந்தனவோ, அவ்வாறே பெண்கட்கு மாங்கல்யஞ்சிறந்தது.

2. இத்துணை மேன்மை வாய்ந்த தாலியைப் பண்டை காலந்தொட்டு உயர்ந்த ஒவ்வொரு வருணத்தாரும் நாயகன் நாயகி இருவர்க்கும் விவாகம் நிகழுங்கால் தங்கள் சமயத்துக்கும் வருணத்துக்கும் ஏற்ற ஒரு அடையாளமிட்டு சிரசினும் கால்களினும் குமிழ் முதலிய சித்திரங்களில்லாதும் இரத்தினங்கள் பதியாதும் சாதாவாய் மூன்று கால்கள் உள்ள இரட்டைத்தாலியாகச்செய்வித்து நாயகனாலே நாயகிக்குத் தரிப்பிப்பார்கள். அது அழுக்குப் படியினும் கழட்டப்படாது * சீவியகாலம் வரை கழுத்தில் விளங்கும்.

3. இவ்வாறிருப்ப நமது வணிகர்கள் நமது சமயத்துக்கும் வருணத்துக்கும் உரிய அடையாளமில்லாது இரண்டு கால்கள் உள்ள ஒற்றைத் தாலியாகப் பல உருக்களுஞ் சேர்த்து செய்வித்து நம் வருணத்தில் புத்திரர்களாலும் செல்வங்களாலும் வாழ்கின்றவர்களால் நாயகன் தொட்டனுப்ப தரிப்பிக்கின்றார்கள்.

4. மேலும் பெண்கட்கு அத்தாலி விஷயத்தில் அவ்வப்பொழுது உண்டாகும் விருப்பத்தைப் புருடர்கள் சாஸ்திர வழியையும் ஆன்றோர் ஆசாரத்தையும் காட்டிக் கண்டியாது பராமுகமாயிருந்தமையால் சிறிதுசிறிதாகச் சிரசினும் கால்களினும் குமிழ் முதலிய சித்திரங்கள் அமைக்கப்பெற்றும் இரத்தினங்கள் பதிக்கப்பட்டும் மாறுபட்டு வருகிறது.

5. மேலும் அத்தாலியை விசேடகாலங்களில் மட்டும் தரித்துக்கொள்வதாய்க் கழட்டி வைத்துவிட்டு, பெரிய தாலி, சிறிய தாலி, யாத்திரைத்தாலி, என்னுஞ் சிலதாலிகளும், தாம்பும் செய்வித்து விரும்பியவாறு ஒன்றைக் கழட்டி ஒன்றைத் தரித்துக்கொண்டு வருகிறார்கள்.

6. மேலும் நம்மவருள் நாயகியாகினும் நாயகனாகினும் இறந்துவிட்டால் அம் மேற்கூறிய நால்வகைத் தாலிகளை இறந்தவளுடையதென்றும் விதந்துவினுடையதென்றும் பாராது விலைக்கு வாங்கித் தரித்துக்கொள்ளுகிறார்கள்.

* சீவிய காலம் தன் சீவியகாலம், அல்லது நாயகன் சீவியகாலம்.

7. 3-வது இலக்கத்திற் கண்ட நமது சமயத்துக்கும் வருணத்துக்கும் உரிய அடையாளமில்லாத * இரண்டு கால்கள் உள்ள பல உருக்களோடுசேர்ந்த ஒற்றைத் தாலியானது நம் முன்னோர்கள் சோணாட்டினின்றும் பாண்டி நாட்டுக்கு வந்தபின் சில கீழ்ச்சாதியார் வழக்கத்தைப் பின்பற்றியதெனத் தெரிகிறதாலும், பிரதிதினம் தரித்துக்கொள்ள வியலாது 5-வது இலக்கத்திற்கண்டவாறு செய்தற்கு ஏற்றகனமாயும் வழிப்பதிப்பயமாயும் இருத்தலாலும் சாஸ்திரவழக்குக்கும் ஆன்றோர் ஆசாரத்துக்கும் உரியதல்லாததாலும், அதனை நஞ்சைவசமயத்துக்கும் வருணத்துக்கும் ஏற்ற ஒரு அடையாளமிட்டு குமிழ் முதலிய சித்திரங்களில்லாதும் பல உருக்கள் சேராதும் மூன்று கால்கள் உள்ள இரட்டைத்தாலியாக மாற்றவேண்டுவதும்.

8. மேலும் இரட்டைத்தாலி, நாயகனும் நாயகியும் பார்வதி பரமேஸ்வரர் போற் பிரிவற விருத்தலையும் நாயகனும் நாயகியும் மனம் ஒருவழிப்பட்டு இல்லிருந்து நல்லறஞ் செய்தலாகிய கிருகத்த நிலையை யுணர்த்துதலையும் ஒற்றைத்தாலி அங்ஙனம் இன்மையையும் அறிய வேண்டுவதும்.

9. 3-வது இலக்கத்திற்கண்ட நம் வருணத்தில் புத்திமான்களாலும் செல்வங்களாலும் வாழ்கின்றவர்களால் நாயகன் தொட்டணுப்பத் தரிப்பிப்பதானதா வாணி ௸ஹணிகா ஊதுர நியதநார ழுகஷணம் ! என்று மனுஸ்மிருதியும் "கைப்பிடி நாயகன்" என்று பட்டினத்தடிகளும் கூறியவாறு பாணிக்கிரகணமே சிறந்ததெனக் கொண்டிருந்தாலும் நாயகன் உளன் என்றதற்கு அறிகுறியாயுள்ளது மாங்கல்யமே யாதலாலும் தாய் தந்தையர்கள் தம்முடைய மக்கட்கு மணம் புரிய பலவிடங்களிலும் வார்த்தையாடி முற்றுப்பெறுது வார்த்தை யாடாத ஓரிடத்தினின்று தானுக வந்து முடியின், இவற்கும் இவட்கும் முடிப்பும் போட்டிருப்ப பலவிடங்களிலும், உரையாடினேம் என்று வழங்கும் வழக்கும், மாங்கல்யத்தையே சுட்டுதலாலும் நாம் திருப்பூட்டுதற்கே நன் முகூர்த்தம் பார்த்து வருதலாலும் ஒரு புருடனுக்கு ஒரு பெண்ணை மணம் செய்ய நிச்சயித்த ஞான்றே நாயக நாயகித் தன்மை அற நூலின்படி சித்தித்தலின் நாயகனில்லாத பிறரால் செய்யப்படும் மாங்கல்யதாரணம் "கணவர் அல்லாதவர் கைதம் மேற்படின் உடம்பு அருவருத்தல்" என்னும் பெண்கள் குணம் கெட்டு பதிவிரதத்தன்மையை பங்கப்படுத்தலாலும் " சுற்று நான்மறைகளார்ப்பத்தூரிவஞ் சங்கமேங்கக், கற்ற நான்முகத்தோன் வேள்விச் சடங்கு நூல்கரைந்த வாற்ஞன், முற்றமங்கல நாண்சாத்தி முழுதலகின்ருள் செங்கை, பற்றினன் பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி" என்றும் " பொதியவிழ் கடப்பந்தண்டார்ப்புயத்திளங்காளை யன்னுன், முதியவர் செந்தீயோம்ப வின்னிய முழங்கக்காந்தி, மதியை மங்கல நாண்பூட்டி வரிவளைச் செங்கை பற்றி, விதி வழியேனை மன்றல் வினையெலா நிரம்பச் செய்தான்" என்றும் திருவிளையாடற் புராணமும் பிறவும் மணமகட்கு மணமகனே தரித்ததாகக் கூறுதலாலும், ஏனைய வருணத்தாரும் அவ்வாறே தரித்து வருதலாலும் மாங்கல்யமே சிறந்ததென்பதும் அதினும் நாயகனே நாயகிக்குத்தாரணஞ் செய்யவேண்டுமென்பதுமே பதிவிரதத் தன்மைக்கும் சாஸ்திர வழக்குக்கும் ஆன்றோர் ஆசாரத்துக்கும் ஒத்ததாகும். ஆதலால், நாமும் மாங்கல்யமே சிறந்ததாகக்கொண்டு மணமகட்கு மணமகனைக்கொண்டே திருப்பூட்டவேண்டுவதும்.

10. பாதாதிகேச பரியந்தம் அணிந்துகொள்ளும் ஏனை ஆபரணங்கட்கும் விநோத விநோதமாய் உடுத்துக்கொள்ளும் உடைகட்கும் சூடிக்கொள்ளும் சுகந்த புட்பங்கட்கும் இட்டுக்கொள்ளும் குங்குமத்திற்கும் லேகித்துக்கொள்ளும் சந்தனக் குழம்பு முதலியவற்றிற்கு பூசிக்கொள்ளும் வாசனைத் தைலங்கட்கும் நிதூஊஷ்ூ ஸுஹதீணாஂ! என்ற வாக்கியத்தின்படி எப்போதும் முகம் சுசியாயுள்ளதற்கும் நாயகன் ஆயுள் விருத்தியடைவதற்கும் தம்மைச் சுமங்கலி என்று யாவரும் சுபகாரியங்களில் விரும்புதற்கும் மாங்கல்யமே காரணமாதலால் ஐந்தாவது இலக்கத்திற் கண்ட போலி மாங்கல்யங்களையும் அணியும் நினைத்தவாறு செய்வித்து அணிவதும் பிறர் மாங்கல்யத்தை இலக்கு வாங்கி யணிவதும் கொழுநரே தெய்வமெனக் கொண்டு பணி செய்து கிடக்கும் பதிவிரதத் தன்மை பழுதடைதற்கும் ஏதுவும் அசுபகரம் உண்டாதற்கும் ஏதுவாதலால் நன் முகூர்த்தத்திற் பூட்டிய மாங்கல்யமே என்ஞான்றும் விளங்கும்படி செய்ய வேண்டுவதும்.

11. இரத்தினங்கள் பதித்தலானது நாயகன் ஆயுளைக் குன்றச் செய்தலால் " மருவிய தாலிப்பூணில் வயித்தாற்பண்ண வொண்ணு " என்றபடி வயிரத்தாலும் அதற்கு அங்கமாக ஏனைய விரத்தினங்களாலும் அலங்கரிப்பதை ஒழித்து நாயகன் ஆயுள் விர்த்தியடையுமாறு சாதாவாய் பெவிக்கவேண்டுவதும் முக்கிய சீர் திருத்தமாதலின் இதனை நன்கு கவனித்து ஒரு மகாஜன சபை கூட்டியாவது ஒவ்வொருவாரும் தனித்தனி கூடியாவது அவ்வாறு செய்ய வேண்டுகின்றோம்.

12. நிகழ்ந்துவரும் வழக்கத்தை எவ்வாறு மாற்றுதல் என எண்ணக்கூடும். இற்றைக்குச் சுமார் 50, 60 வருடங்கட்கு முன் பெண்மக்கள் எல்லாம் மார்கழி மாதம்திருவாதிரை நட்சத்திரத்தில் நடக்கும் திருவாதிரைப் புதுமையில் குதிரையில் ஏறி விபூதிப் பையைச் சேலையில் முடிந்துகொண்டு விநாயகர் கோயிற்குப் போய்வரும் வழக்கத்தை அறவே யொழித்து, காலால் நடந்து போய்வரும் வழக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறோமன்றோ. அத்துணைச் சிறப்பில்லாதவற்றிற் சீர்திருத்தஞ் செய்த நாம் இன்றியமையாத இவ்விஷயத்தில் ஏன் சீர்திருத்தம் கொள்ளலாகாது.

13. ஆதலால் நம்மவரனைவரும் இவ்விஷயத்தில் முன்னின்று சீர்திருத்தம் செய்யவேண்டுமெனப் பல காலும் வேண்டுகின்றோம்.

* இதனைக் கழுத்துரு என்பர்.

[கடிதக்காரர் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

சந்யாசிகளிருவர் தன்மை.

வைசியமித்திரன் நண்பர்களாகிய உத்தம சிலர்களுக்கு விஞ்ஞாபனம்.

ஐயன்மீர்! மமுநூடூவ சந்யாசிகளிருவரிலொருவர் தேச சஞ்சாரஞ் செய்து வருங்கால், ஓரிடத்தில் வாதப் பிக்ஷை கேட்டனர். பிக்ஷையளிப்போர் சிருங்கார விஷயவாதஞ் செய்கவென்றனர். அதற்குச் சில காலம் வாயிதாக் கேட்டுக்கொண்டு சென்றனர். அங்ஙனஞ் சென்ற சந்யாசியார் ஒரு நகரத்தில் அரசன் இறந்தமை தெரிந்து சீடர்களிடத்தில்தமது சரீரத்தை ஒப்புவித்து, இச்சரீரத்திற்கு ஆபத்து வருமேல் அத்தருணம் நீங்கள் அரண்மனையில் வந்து தத்துவமசிவாக்கியம் பாடுங்களென்று சொல்லிவிட்டுப் பரகாயப் பிரவேசப் பழக்கத்தால் தாம் அவ்வரசன் சரீரத்திற் பிரவேசித்தனர். இராஜ பத்தினிமார் முதலாயினோர் அரசன் உயிர்பெற்றெழுந்தானென்று மகிழ்ந்தனர். உடனே ராஜ ரூபியாகிய சந்யாசியார், மந்திரிகளிடத்தே ராஜ காரியத்தை ஒப்புவித்துவிட்டு ராஜபத்தினிகள் பலருடன் அனவரதமும் அந்தப்புரத்திலேயே, லீலா விநோதராய்ச் சம்போகாதி செய்து, மதனசாஸ்திர சிருங்காரங்கள் ஒவ்வொன்றும் அவர்களாற்றெரிந்துரைத்துப் பழகி வருவாராயினர். அப்பொழுது இராஜபத்தினிகளி லொருத்தி வேற்றுமை தெரிந்து, அதனை யுள்ளத்தடக்கி, நமது தேசத்திற் றகிக்கப்பெறுத பிரேதமிருந்தா லுடனே தகித்துவிடுகவென்று

(இதன் தொடர்ச்சி 7 ம் பக்கம் காண்க.)

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

" எப்பொருள்யார்யார்வாய்க் கேட்பினு [மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"— [திருக்குறள்

Editorial

வைசியமித்திரன்.

1911௵ செப்டம்பர்மீ 4உ

தேவகோட்டை.

சீர்திருத்தம்.

எந்த தேசமானுலும், சீர்திருந்தி விளங்குவதற்கு, அதன் ஜனங்களே முக்கியமான காரணஸ்தராவர். அந்த ஜனங்கள் சீர்திருந்துவதற்குக் காரணம், கல்வியே. அக்கல்வி பரவுவதற்குச் சாதனங்கள், பத்திரிகைகளும், சபைகளுமேயாம். எத்தனை பத்திரிகைகளிருப்பினும், எத்தனை சபைகளிருப்பினும், அவைகள் மூலமாய் வெளிப்படும், சீர்திருத்தங்களை ஒவ்வொருவரும், தத்தம் வீட்டிலேயே அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தாலேதான், கொஞ்சக்காலத்தில், ஒரு ஜனசமூகமே, முற்றிலுங் கூடி, அவ்வக்காலங்களுக்கு வேண்டிய சீர்திருத்தங்களை, உடனே, நிலைவரமாகச் செய்யக்கூடும்.

(ஜப்பான் தேசமானது சுமார் 25 வருஷங்களுக்குமுன், இருந்த இடமே தெரியாமலிருந்தது. ஆனால் இப்போதோ, இவ்வுலகின் எந்தப்பாகத்திலுள்ளவர்களுக்கும், "ஜப்பான்" என்ற பெயர், வீட்டுப்பேச்சாக அமைந்துவிட்டது. சீனுவிற்குத் தென்கிழக்கிலுள்ள பிலிப்பைன் தீவுகள், சிலவருஷங்களுக்கு முன்புதான் அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கியமாகாணத்தார் கைக்குவந்தது. இப்போது, அத்தீவிலுள்ளார், ஐக்கியமாகாணத்தார் எவ்வளவு நாகரீகமும் சீர்திருத்தமும் அடைந்திருக்கிறார்களோ அதற்குச் சரியாக விளங்குகின்றார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம், அவ்வவருக்கு வேண்டிய சீர்திருத்தங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்ததல்லவா. சீர்திருத்தத்தை ஒரு புகைவண்டித் தொடருக்கு ஒப்பிடலாம். அவ்வண்டித்தொடரில், முன்வண்டியாயிருக்கும்,இயந்திரவண்டியே, சீர்திருத்தத்தைப்போதிக்கும், மேதாவிகளாவர். மற்றும் பின்கோர்க்கப்பட்டுள்ள வண்டிகளே சீர்திருத்தத்தை வேண்டித்தொடருபவராவர். இயந்திரவண்டியானது, இயக்கப்பட்டால், விரும்பிய இடமெதுவோ அதற்குத் தானுகப்போய்ச்சேரக்கூடும். ஆனால் மற்றவண்டிகளுக்கு அங்ஙனம், இயலுமா? ஒருபோதும் இயலாது. ஒவ்வொரு வண்டிகளும், தனித்தனி இயந்திரவண்டிகளானுலேதான், பிரயோசனப்படும்.), அப்படியில்லாமல், முன் வண்டிமாத்திரம் போகட்டும், மற்றவைகளைப் பின்பு தொடர்ச்சி செய்வோமென்று நினைத்துக்கொண்டிருந்தாலோ, அவ்வண்டிகள், முன்னேற்றத்தைக் கனவிலுங்கருதமுடியாது. ஜன சமூகமாகிய வண்டிகளுக்குக் கல்வியாகிய இயந்திரம் அமைக்கப்பட்டிருந்தால் அவ்வளவும் ஏககாலத்தில், எவ்வளவு சுலபமாய் முன்னேறக்கூடும்.

சீர்திருத்தமானது, ஒருவருக்கே சொந்தமானதன்று. தனக்கும், பிறருக்கும், நன்மையை விளைக்கக்கூடியதாயும், ஏனைய அறிஞர்களால் ஒப்புக் கொள்ளக் கூடியதாயுமிருத்தலே, உண்மையான சீர்திருத்தம். எல்லோருடைய அநுபூதியில், திடீரென ஏக காலத்தில், அது உண்டாகக்கூடியதன்றுஉலகஅநுபவமும் கல்வி முதிர்ச்சியும், பொருந்திய மேதாவிகள் மூளையினின்றே உருக்கொண்டு அதுவெளியேவருவதாகும். மற்றவர்கள், அதை முன்பின்யோசிக்காமல் பின்பற்றுவதேமுறை. அதை விடுத்து நாமும், அந்நிலைக்குவரும்போது பார்த்துக்கொள்வோமென்று சும்மா இருந்துவிட்டால், விருத்திக்கு இடமென்பது என்றுமேயில்லை.

தன வைசியராகிய நமது சமூகத்திற்குச் சீர் திருத்தம் இக்காலத்தில் அவசியம் வேண்டுமென்பது யாவரும் நன்கு அறிவார்கள். ஆனால் அதை முதல் முதல் யாரே, கைக்கொள்ள வேண்டுவதென்பதுதான் நிச்சயிக்கப்படவேண்டும். இப்படி நிச்சயிப்பதுதான் பிரயாசை யென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இது, பூனை கழுத்தில் மணி கட்டுவது யார் என்று எலிகள் யோசனை பண்ணிய கதையைப் போலிருக்கிறது. பத்திரிகை வாயிலாக எத்தனை விதமான யோசனைகளைத் தெரிவித்தாலும், படிப்பவர் மனதில், அவை மின்னல் உண்டாகி மறைந்ததைப் போல, பத்திரிகை கையிலிருந்து நழுவினதோடே நழுவிவிடும். ஆகவே, எல்லோரும் சபைகளிற் கூடிப், பிரரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்ட விஷயங்களை அந்த நாளிலிருந்தே அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டியது. அதிலும் முதன்மையாக நிற்கவேண்டியவர்கள் செல்வவந்தர்களும் " நாக்கசைந்தால் நாடசையும் " என்ற தன்மையையுடைய செல்வாக்கினருமேயாம். " சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ், சொல்லிய வண்ணஞ் செயல். " என்று பொய்யா மொழியார் அருளியபடி, ஒரு காரியத்தை நிலை நிறுத்துவது கஷ்டமானதாயிருந்தாலும் " மெய் வருந்தக் கூலி தரும் " என்ற அவர் வாக்கையே கருதி முயன்றால், யாவுஞ் சாத்தியமே.

இக்காலத்தில், நமதுநகரங்களில் பெரிதும் நாகரீகமாக விளங்குவது "கானுடுகாத்தான்" என்று நாம்சொல்லாமலே யாவரும் அறிந்திருக்கிறார்கள். ஆகையால் அந்நகர வாசிகளாகிய நமது சகோதரர்களே முன்னின்று நம்மினத்தவருக்கு வேண்டிய சீர் திருத்தங்களை ஆரம்பித்து வழிகாட்டுவதோடு எல்லோரையும் பின்பற்றச் செய்வதற்குரிய சாதனங்களையும்அவசியம் செய்வார்களானுல் நமது நிலை, சிலகாலங்களுக்குப்பின் வெகு உன்னதமாய்விடுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

குற்றத்தையே கருதி குணத்தை விடுப்பதில், பயன் என்ன விருக்கிறது. ரோமாபுரியில் ஜூலியஸ்ஸீஸர், வாழ்ந்த காலத்திலுண்டாயிருந்த நாகரீகத்தை ஏனைய நாட்டினர் புகழ்ந்தனரேயன்றிப் பின்பற்றவில்லை. அவர்கள் பின்பற்றுதவரையில் சீர் திருந்தியவராய் விளங்கவுமில்லை. அக்காலத்தில் ஐரோப்பாவில் பெரிதும் வியாபகமாயிருந்த இந்த ரோம ராஜ்ஜியம், தன் தலைமையிலிருந்து, இக்காலத்தில் இறங்கிவிட்டது. அந்த ராஜ்ஜியமாகிய விளக்கில் பொருத்திய ஏனைய ராஜ்ஜியங்களாகிய தீவர்த்திகள் இப்போது எங்கும் பிரகாசிக்கின்றன. " பழையன கழிதலும் புதியன புகுதலும் " நியாய விரோதமன்றென்பதை நமது சகோதரர்கள் கருதுவார்களாக.

நோயில்வாழ்வு.

(முற்றொடர்ச்சி.)

முக்கியமாக நாம் உட்கொள்ளுங் காற்றுக்கும் வெளிவிடுங் காற்றுக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. நம்மால் வெளிவிடப்பட்ட காற்றில் சரீரத்துக்குள்ளிருந்து வெளிக்கொண்டு வந்த அழுக்கு நிறைந்திருக்கின்றது. அந்தக் காற்று விஷத்தன்மையுள்ளது. அதனை மறுபடி உட்கொள்ள யோக்கியமானதன்று. ஒரு மனிதனை வெளிக்காற்று சிறிதும் புகாத சிறிதான ஒரு அறையிலாவது பெட்டியிலாவது அடைத்து வெளிக்காற்று உட்செல்லாமல் நன்றாக மூடிவிட்டுச் சிறிது நேரம் சென்று பார்த்தால் அவன் இறந்தே போவான். அவ்வண்ணமே ஒருவன் தண்ணீரில் அமிழ்ந்தாலும் சொற்ப நேரத்திற்குள் இறந்து விடுகிறான். தண்ணீரில் நல்ல காற்று இல்லாததினாலும் சுவாசிக்க இடம் கிடைக்காமையினாலும் அப்படியாகிறது. அவன் வெளியிலிருந்து நல்ல காற்றை உட்கொண்டிருக்கும்பொழுது செந்நிறமாய்ப் பளபளப்புடன் இருந்த அவன் உடம்பிலுள்ள உதிரம் இப்பொழுது நல்ல புதிய காற்றை உட்கொள்ள இடமில்லாமையால் கருப்பு நிறமாக மாறி அந்தக் கருப்பு நிற இரத்தமே தேகத்தில் திருப்பித் திரும்பி யோடும்படியாகின்றது. அதனால் அவன் அதி சீக்கிரத்தில் மதி மயங்கி மாண்டு போகிறான். நாம் மூச்சு விடுவதினால் வாயுமண்டலம் எவ்விதம் அசுத்தப்படுகிறதோ, அதேபோல மற்றப் பிராணிகளாகிய ஆடு மாடு முதலானவைகள் மூச்சு விடுவதினாலும் அந்த வாயு மண்டலம் அசுத்தத்தை யடைகிறது. அல்லாமலும் நெருப்பும் விளக்கும் எரிவதனாலும் வாயு மண்டலம் அசுத்தப்படுகிறது. தூசு தும்புகளாலும் அழுக்காலும் கூட வாயு மண்டலத்தின் பரிசுத்தத்திற்குக் கெடுதல் உண்டாகின்றன. இரவில் நல்ல காற்று கிடைக்காமல் அநேகர் தூக்கமின்றி வருந்துகிறார்கள். அவர்கள் தங்கள் வீட்டிற்குள் நல்ல காற்றுப் புகாதபடி எல்லாக் கதவுகளையும் அடைத்துக்கொண்டதினால் அவ்விதக் கஸ்தி யேற்படுகிறது. ஆதலால் அவ்வாறு எல்லாக் கதவுகளையும் மூடிவிடலாகாது. சாளரங்களைத் திறந்து வைத்தல் வேண்டும். அவ்விதம் செய்வதினால் நாம் மூச்சு விடுங் கெட்ட காற்று வெளியிற் செல்லவும் வெளியிலுள்ள புதிய காற்று உட்புகவும் அனுகூலமாகவிருக்கும். தூங்கும் பொழுது துணியால் முகத்தை மூடிக்கொண்டு படுக்கிற கெட்ட வழக்கமும் தீபத்தை வைத்துக்கொண்டு தூங்குகிற வழக்கமும் ஒரு (படுக்கை) பாயவில் ஒன்றுக்கு அதிகமான மனிதர்கள் நெடுநேரம் சயனித்தலும் இத்தியாதி கெட்ட வழக்கங்கள் பலரிடத்திலும் உண்டு. அதை அவசியமாக விலக்கவேண்டும். கெட்டு அழுகிப்போன பதார்த்தங்களினும் செத்துப் புழு வைத்துத் துர்நாற்ற மடிக்கின்ற நாய், கழுகு, பாம்பு, மீன் போன்ற பிற வஸ்துக்களினும் மல மூத்திராதி அழுக்குக்களினும், கொடிய தொத்து நோயாளிகளாக யிருப்பவர்கள் பேரிலும், படிந்து வருகின்ற காற்றையும், இன்னுமுள்ள கெட்ட பொருள்கள் எல்லாவற்றினும் விஷ வஸ்துக்களெல்லாவற்றினும் வியாபித்து வரும் காற்றும், கொடிய விஷக்காற்றாக வயித்திய நூல் கூறுகின்றது. அவ்விதக் காற்றை உட்கொள்ளலாகாது. அழுகித் துர்நாற்ற மடிக்கின்ற பதார்த்தங்களையும் கனிவகை கிழங்கு வகைகளையும் செத்துப் புழு வைத்து நாற்றங் கண்டிருக்கும் மிருகாதிகளையும், பறவைகளையும், ஊர்வனவற்றையும், நீர் வாழுஞ் செந்துக்களையும் உபயோகிக்காமல், ஊருக்கு வெளியில் மனிதர் உலாவக் கூடாத இடங்களிற் கொண்டுபோய்ச் சேமிக்கச் செய்வது நன்மையைத்தரும்.

இன்னும் வரும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் கல்வி.

"கைப்பொருடன்னின் மெய்ப் பொருள் கல்வி" என்றபடி மானுடஆக்கையைப் பெற்றவர்களுக்குக் கைப் பொருளைக் காட்டிலும் உண்மையான பொருள் கல்வி என்பதும் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றபடி கணித நூலும் இலக்கண நூலும் இரண்டுகண்களென்பதும், நமதுஔவையார் அருள் வாக்கு. "கண்ணுடையரென்பர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்" என்றபடி கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவோர் கற்றவரே, மற்றைக் கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையர், கண்ணிலர் என்றும், "கற்கக் கசடறக் கற்பவை கற்றபினிற்க வதற்குத்தக" என்றபடி ஒருவன், கற்க வேண்டிய நூற்களைப் பழுதறக் கற்க, அங்ஙனங் கற்றால் அக் கல்விக்குத்தக, அவை சொல்கின்ற நெறியின் கண்ணே நிற்க என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார். மேற்சொல்லியபடி "ஓதுவ தொழியேல்" யென்னும் வாக்கியத்தைக் கொண்டு, மரணபரியந்தம் ஓதல் வேண்டுவது அத்தியாவசியம். அப்படிக் கற்றவர்கள் மாதா பிதா குரு தெய்வத்தை வழிபடல், இல்லற தர்மத்தை இயல்புடன் நடத்தல், பெரியோரைப் பேணல், ஆதுலரை ஆதரித்தல், நல்ல வழியில் ஈட்டல், அவ்வழியே, வருவாய்க்குத் தக்க செலவு செய்தல் "இப் பிறவி தப்பினுல் எப்பிறவிவாய்க்குமோ" என்றபடி விதி விலக்குகளைத் தெரிந்து நற்கருமங்களைச் செய்து சற்கதியை யடைவார்கள். கற்றவர்களு கெட்ட வழியில் செல்ல மாட்டார்களா வென்றால், நீச்சுக்காரன் தண்ணீரில் செல்லும் பொழுது, தெய்வகதியாய் கை ஓய்ந்து விட்டால், தன்னுடைய பாலப் பழக்கத்தாலும், வலிமையினாலும் கரையேறி விடுவான் என்பது நிச்சயம். அதுபோல் கற்றவனுக்கும் தெய்வ கதியால் குற்றம் வந்து விட்டால், மனமென்னும் மதங் கொண்ட யானையை, அறிவென்னும் அங்குசத்தால் அடித்து நல்ல வழியில் நடப்பானே யொழிய ஒரு பொழுதும் கெட்ட வழியில் நடக்கமாட்டான்.

"இளமையிற் கல்" என்னும் வாக்கைக்கொண்டு, மற்றஜாதியாரில்மிகுந்த பொருள் இருப்பவர்களும் இல்லாதவர்களும், தங்கள் புத்திரர்கள் சமஸ்கிருதம், தமிழ், சங்கீதம், இங்கிலீஷ் மாந்திரிகம் ஜோஸ்யம், வயித்தியம், வியாபாரம், உத்தியோகம் முதலியவைகளுக்குத் தக்கபடி கல்வியை நன்கு கற்கும்படி செய்து அதனால் தக்க சம்பாத்தியத்தை யடைந்து சுகமாய்வாழ்ந்துவருகிறார்கள். அதை அறிந்த நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களெல்லோரும் இடம், பொருள், ஏவல், முதலியவை எல்லாமிருந்தும், தங்கள் புத்திரர்களை நன்கு கற்கும்படி செய்யாது சொற்பப் படிப்புடன் தூர தேசத்திற்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்புத்திரர்கள் மாதா பிதா பெண்டீர் பிள்ளைகளை விட்டுக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துப் பொருளை இங்கு கொண்டு வந்து திரவியத்தின் அருமை தெரியாது தேவைக்கு மிஞ்சிய வீட்டுக்கும், திருடர்கள் கொண்டுபோகும், திருப்தியில்லாத நகைகளுக்கும், நறுமணமில்லாது செய்கின்ற திருமணத்துக்கும், அதில் அளவுக்கு மிஞ்சிச் செய்கின்ற செலவுக்கும் குறிப்பறிந்து, கொண்டு விலை செய்யாமல், கோர்ட்டுக்குங் கொடுத்து வறியவர்களாகுகின்றார்கள். நமது மக்களை மாதா பிதா, மேற் சொல்லிய அவசியமில்லாத பெருஞ் செலவுடன் சேர்த்துத் தக்க உபாத்தியாயரைக் கொண்டு நன்கு கற்கும்படி செய்திருந்தால் கல்வி யென்னும் மந்திரி ஒரு போதும் நாகரீகமில்லாத செலவு செய்ய ஒத்துக்கொள்ள மாட்டானென்பதற்கு என்ன ஐயமிருக்கிறது.

இலக்குமி என்னுஞ் செல்வ மாமியுடன் வாணி யென்ற கல்வி மருமகள், ஒத்திருப்பாளேயானல், சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிந்தது போலிருக்கும். நமது மரபினர் இனிமேலாவது வாழ்நாளை வீண் நாளாகக் கழியாமல் தனஞ் சம்பாதிப்பதில் இருக்கும் முயற்சியில், அணுமாத்திரம் கல்வி கற்கும் விஷயத்தில் வைத்து, வசிக்கும் ஊர்களில், ஊர்ப்பொதுவிலாவது ஒருவராவது நமது ஜாதியாரின் பொது நன்மையைக் கருதி, வித்தியாசாலை யேற்படுத்தி, அதில் தக்க உபாத்தியாயர்களை நியமித்து ஆத்மலாப முதலியவைகளைக் கருதி, தாய் பாஷையாயுள்ள தமிழையும், தொழிலைக்கருதி, ராஜபாஷையாயுள்ள இங்கிலீஷையும் தங்கள் புத்திரர்களை அனுப்பி நன்கு கற்கும்படிசெய்து வருடத்துக்கோர் முறை நவராத்திரியில் மாணுக்கர்களைப் பரீக்ஷித்து அவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் பரிசளித்து வந்தால், நமது மரபினர்கல்வி, சிகரத்தில் ஏற்றிவைத்த தீபம் போல் பிரகாசித்து ஓங்கும். எல்லாத் தானங்களிலும் வித்தியா தானம், கொடுத்தஅளவுக்கு மேம்பட்டதாய் இம்மை மறுமை இரண்டிற்கும் பயனைக் கொடுக்கும். ஆகையால் அதி சீக்கிரம் நமது மரபினர் வித்தியாசாலை ஏற்படுத்திப் புத்திரர்கள் கல்வியில் தேர்ச்சி யடையும்படி செய்யும்பொருட்டு சாரதாம்பாள் திருவருள் புரிக.

கரு. கி. கரு. சொர்ணநாதன் செட்டி.

கும்பகோணம் மூனையடுவார் திருவடியாணுக்கர் சபை.

இச்சபை சென்ற பங்குனிமீ 27உ ஸ்தாபிக்கப்பட்டு அது முதல் ஸ்ரீ சக்கிரபாணி சுவாமி தெற்கு வீதி மூனையடுவார் சங்க பாடசாலையில் ஒவ்வொரு மாதம் பௌர்ணமியிலும் கல்வி பயிலும் மாணுக்கர்களால், மூனையடுவார் நாயனார் சரிதம், கல்வி, நல்லொழுக்கம் அறிவு, கற்பு, இந்த ஐந்து விஷயமும் முறையே நன் மாணுக்கர்களால் உபன்யசிக்கப் பட்டுவருகிறது. நாளது மாதம் பௌர்ணமி யன்று கடவுள் என்னும் விஷயம் நடை பெறுமாம்.

தமிழ்ச்சங்கம்:—இச்சங்கம் ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை கூடுவதாகும்.

உபாத்தியாயர்கள் சங்கம்:—இச்சங்கம் கும்பகோணம் ஸ்ரீ நாகேஸ்வர சுவாமி திருமஞ்சன வீதியி லமர்ந்தில கும் டவுன் ஹை ஸ்கூலில் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல்சனிக்கிழமை தோறும் இவ்வூர் கனம் சப் அஸிஸ்டெண்டு இனிஸ்பெக்டர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் எல்லா எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களும் ஒருங்குகூடி விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் தெரிவிக்கப் படுவதுமாகிய கூட்டம் கூடப்படுமாம்.

நன்குசெய முயல்வோன்.

காரைக்குடி.

31—8—11.

காலநிலை:—சென்றவாரம் முதல் மப்பும் மந்தாரமுமாகவும், சிற்சில சமயங்களில் புழுதியடங்கும்படியான தூரலுமிருக்கிறது. ஆனால் உஷ்ணம் தணிந்தபாடில்லை.

அகவிலை:—காய்கறிகள் வெகுகிராக்கியே. பச்சரிசி நய்மானது ரூ 1-க்கு பக்காபடி $4\frac{3}{4}$ ஆகவும் டின் நெய் பக்காபடி 1-க்கு ரூ 2வீதமும் விற்கிறது.

யூனியன்:—இராக்காலங்களில் வெளிச்சம் சரியானபடி போடப்பட்டு வருகிறது. வீதிகளில் பரவுவதற்காக சாலைமண் கொண்டுவந்து கொட்டி வெகு காலமாகியும், பரவி விடாததால், நடமாடுகிற ஜனங்களுக்கும் வண்டிகளுக்கும் இடஞ்சலாகவே யிருக்கிறது. இவ்வூர் சேர்மேன் அவர்கள் சீமைக்கு மகுடாபிஷேக வைபவத்துக்காகப் போயிருந்து சௌக்கியமாகத் திரும்பி வந்து விட்டார்கள். அன்னிய தேசங்கள் போய் நேரில் பார்த்துவிட்டு வந்ததற்கு சுகாதார விஷயமாக இந்த யூனியனுக்கு நூதனமாக ஏதும் ஏற்பாடு செய்தால் நிரம்ப நலம். (கிலாடர் ஹௌஸ்) ஆடடிக்கும் சாலை சர்க்காரில் கட்டி நிரம்ப நாளாகியும் இன்னும் உபயோகத்துக்குக் கொண்டு வாராத காரணம் ஏனோ? வீதியில் கூட்டப்படும் குப்பைகளை கண்டவிடங்களில் குறவர்கள் கொட்டி வருகிறார்கள். ரப்பிஷ் டிப்போ யேற்படுத்தி, அதில் கொண்டு போய்க் கொட்டச்செய்தால் சுகாதாரம் நன்றாயிருக்கும். இதைச் சேர்மேனவர்கள் கவனிப்பார்களாக.

காரை நகர் வாசி.

ஓர் சம்பாஷணை.

கண்டனூரில் ஓர் நாள் சொக்கலிங்கஞ் செட்டியாரென்பவரொருவர், தமது வீட்டிற்கு இரவில் வெகு நேரங் கழித்து வந்தார். அவர்மனைவியார், அவருக்குச் சாப்பாடிட்டு முடிந்தபின்னர், தானும் உண்டு வந்துநிலா முற்றத்திலவர் அருகிலிருந்தபொழுது,

சொக்கலிங்கஞ் செட்டியார்:—பெண்ணே! இன்று உன் முகம் வாடியிருப்பானேன்?

மனைவியார்:—தாங்கள் வெளியே சென்று வெகு நேரமாய், வீட்டுக்கு வாராமை பற்றியே தான்.

சொ:—பேதாய்! நான் வீண் பொழுது போக்கினதாய் உன் எண்ணமோ? அப்படி நினைக்கவேண்டாம். நம்மூரிலுள்ள செ. அரு. சித. பங்களாவில், கல்வியிற் சிறந்தோர் பலர் கூடி உபன்யாசஞ் செய்வதாய் என் நண்பரொருவர் சொல்ல அவருடன் அச்சபைக்குச் சென்றிருந்தேன். அதனாலே கால தாமதமாயிற்று.

ம:—என் உயிரே! அங்கு நடந்தவைகளை எனக்குச் சொல்ல திருவுளம் பற்ற விரும்புகிறேன். தடையுண்டோ?

சொ:—அன்பிற் குறைவிடமே! நீ விரும்பிக் கேட்கும்போது, நான் சொல்லுவதற்கு என்ன தடை. நன்கு கேட்பாயாக. அவ்விடத்தில், நம்மவரும், ஏனையருங் வந்து கூடினார்கள். சபையோருக்குப் பிரதி நிதியான ஸ்ரீமான் மு. ராம. சோமசுந்தரச் செட்டியாரவர்கள் பிரரேபணையின் மீது, லால்குடி ப்ருமஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். முகவுரைமுடிந்தபின்புமன்னார்குடி ப்ருமஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள், சிவகங்கை ப்ருமஸ்ரீ இராமாநுஜ ஐயங்காரவர்கள். ஸ்ரீமான், தெ. அரு. சித. இராமநாதச் செட்டியாரவர்கள், ஸ்ரீமான், மு. ராம. சோமசுந்தரச் செட்டியாரவர்கள், அரியக்குடி ப்ருமஸ்ரீ ரெங்க ராமாநுஜாச்சாரியாரவர்கள், ஸ்ரீமான். அ. நா. அ. அண்ணாமலைச் செட்டியார் என்ற சிறுவர் ஸ்ரீமான். சித. நடேசச்செட்டியாரென்னுஞ் சிறுவர், முதலியவர்களால், அருமையான உபன்யாசங்கள் நடந்தேறின, பின்பு, அரியக்குடி ப்ருமஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரவர்கள்,

"திருப்புலவரான்மருவிச்செம்மையலர் [விட்டு,
உருப்ப மொழிநிழலாயோங்கி—விருப்பி [னோடு,
வீழ் பொருளை நல்கி விபுதர்க் குறையுளு [மாய்,
வாழவையைக் கற்பகமாவை"

என்ற செய்யுள்பாடிபொருள் விரித்தார்கள். எல்லோரும் ஆனந்தமுற்றார்கள். கடைசியில் ஸ்ரீமான் இராமநாதச் செட்டியாரவர்கள் சபையோருக்கு வந்தனோபசாரஞ் செய்ய, சபை நிறைவெய்தியது.

ம:—அப்படியா! இதுவல்லவோ கல்வி அபிவிர்த்திக்கு அழகு. பலவிடங்களிலும் இப்படியே சபைகள் உண்டானால் ஜன சமூகத்திற்கு உயர்ச்சியான புகழுண்டென்று நினைக்கிறேன்.

சொ:—ஆமாம் என் அன்பே! சிவபெருமானும் அப்படியே அருள் செய்வாராக.

தனவைசியன்
கண்டனூர்.

பொது வர்த்தமானங்கள்.

அதிசய முட்டை.

டெவர் கோட் என்னும் பிரதேசத்தில் ஒரு கோழியிட்ட முட்டை $4\frac{1}{2}$ அவன்சு நிறை யிருந்ததாம். அதையுடைத்துப்பார்த்த போது உள்ளேயிரட்டைக் கருவும் வேறொரு முட்டையுமிருந்தனவாம்.

வண்டிக்காரர் கட்டுப்பாடு.

சிவகங்கைக்கும், மானமதுரைக்குமிடையே ஓடிய குதிரை வண்டிகளும், சாதாரணமான வண்டிகளும், இப்போது வண்டிக்காரர் ஒற்றுமையினல், பழைய பிரகாரம் ஓடுவதாய்த் தெரிகிறது.

மின்சார சமுக்காளம்.

பாரீஸில் வீட்டில் உஷ்ணம்உண்டாவதற் கேதுவாய் மின்சார சமுக்காளங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இந்த சமுக்காளங்களினடியில் எஃகு கம்பிகளால் வலைபோல்பின்னப்பட்டிருக்கின்றனவாம். அவை மூலமா யுஷ்ணம் பரவுகிறதாம்.

சீதோஷ்ணங்களை யறிவிக்கும் கல்.

பின்லன்ட்தேசத்தில் ஒருவிதமான கல்லிருக்கிறதாம். அது சீதோஷ்ணங்களைச் சரியாகத் தெரிவிக்கிறதாம். மழைகாலத்தில் கறுப்பாய் மாறுகின்றது மற்றக்காலத்தில் வெண்ணிறப் புள்ளிகளையுடைதாகத் தோன்றுகின்றதாம்.

வெடிமருந்து விபத்து.

திருமங்கலத்துக்கு அருகிலுள்ள சேதங்குடியில் அருளானந்தம்ஆசாரியென்பவன் கற்பாரையைப் பிளக்கச்சுரங்கம் வைத்துக்கொண்டிருக்கும் போது வெடிமருந்தில் நெருப்புப் பிடித்துவிட்டது. அந்தஆசாரிக்கு உடம்பில் அநேக விடங்களில் காயம். அவனது இடதுகையை ஆஸ்பத்திரியில் வெட்டியெடுத்துவிட்டார்களாம். பிழைப்பதில் நிச்சயஞ்சொல்லக்கூடுதில்லையாம்.

சீட்டாட்டப் பள்ளிக்கூடங்கள்.

சண்முகநாதபுரம், சிவன் கோவில், சந்நிதானக் கொட்டகையிலும், பிள்ளையார் கோவில் சந்நிதானத்திலும் தினமும் சீட்டாட்டப் பள்ளிக்கூடங்கள் நடப்பதாய்க் கேள்வி. அப்பள்ளிக்கூடத்தில் அவுட் வகுப்பு, புல்ரெங்கு வகுப்பு, 304 என் வகுப்பு, முதலிய பிரிவுகளுள்ளனவாம். இவ் வகுப்பார்களைப் போலீசாரே பரீக்ஷித்து, பரிசு கொடுப்பார்களென்று எதிர்க்கின்றோம்.

பணவாசை.

தென் அமெரிக்காவி லொருவன் வழியில் வரும் திருடருக்கஞ்சி தன் கையிலிருந்த பன்னிரண்டு பவுன்களை ஒவ்வொன்றாய் விழுங்கிவிட்டுக் குறித்த இடம் போய்ப் பேதி மாத்திரை சாப்பிட்டும் இவைகள் வெளி வாராமையினல் வயிறு வீங்கி வருத்த மதிகரிக்க, வைத்தியர்கள் மயக்கிச் சத்திர வைத்தியஞ் செய்து பவுன்களை எடுத்து மீளவும் தைத்து விட்டார்கள். அவனும் உயிர் பிழைத்தான்.

நீரிலிறங்கி விட்டனர்.

சண்முகநாதபுரத்தில் விநாயகசதுர்த்தியைக்கொண்டாடிய தினத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்துப்பாலர்கள், கை பழக எழுதின ஏடுகளைவழக்கம்போல நீர் நிலையில் எறிந்தார்கள். இரண்டு தனவைசியச் சிறுமிகள், அவைகளை எடுக்கப் போனார்கள். ஒரு சிறுமி இறந்து போனாள். மற்றவள் அபாய நிலையில் இருக்கக் கண்டெடுக்கப்பட்டுச் சிகிச்சையின் மீது பிழைத்தாள். பெற்றோர் அஜாக்கிரதையினலேயே இச்சம்பவங்கள் பெரிதும் உண்டாகின்றன.

ஜப்பானில் வர்த்தமானப் பத்திரிகைகள்.

முதல் முதல் ஜப்பான் தேசத்தில் வர்த்தமானப் பத்திரிகை யாரம்பித்தது 1852 ம் வருஷத்தில் அதுமுதல் நாளுக்கு நாள் பத்திரிகைகளின்தொகை அதிகரிக்க தற்போது அத்தேசத்தில் 4000 பத்திரிகைகள் பிரசுரமா யிருக்கின்றன. ஜப்பானியர் பத்திரிகைவாசிப்பதில் மெத்தப் பிரீதியுள்ளவர்கள். "டோக்கியோ நகரத்தில் பிரசுரமாகும் "டிலிங்கிம்போ, என்னும் பத்திரிக்கைக்கு நான்குலட்சம் பேர் கையொப்பக் காரர்களாம். நம்தேசப் பத்திரிகைகளின் பாட்டை என்னென்று சொல்லுவேம்.

தேவாரத்திருமுறைவெளிப்பாடு.

பல தேசத்தும் பல பழைய பிரதிரூபங்களைக் கொண்டு, பரிசோதிக்கப் பட்டதும், ஆயிரம் பாடபேதங்களும், ஆயிரத்தைஞ்னூறு திருத்தங்களை யுடையதும், அரும் பதப் பொருள்களும், திருமுறைப் பெருமையும், அறைக்குளடைத்த தேவாரத்திருவெழுகூற்றிருக்கையும், தல அகராதி, திருப்பாட்டகராதி, திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவுருவப் படமும் சேர்த்துச் சுத்தப் பதிப்பாக யாழ்ப்பாணம் ஸ்ரீமத் சுவாமிநாத பண்டிதரவர்கள், அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இதைச் சைவ சமயிகள் யாவரும் பாராட்டவேண்டிய தவசியமே.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி தேவஸ்தான வழக்கு.

மதுரை,ஜில்லா நீதிபதிக்கு முன்னிலையில் மிஸ்டர்: சி. சாம்பசிவமுதலியார் மிஸ்டர். எம். எஸ். சின்னசாமிபிள்ளையாகிய இருவரும், கோயில் மானேஜர் மிஸ்டர் பி. எஸ். அனந்தநாராயண ஐயர், கமிட்டிமெம்பர்களானமிஸ்டர். வயி. நாக. ராம.அ.இராமநாதன்செட்டியார், கே. வி. சுப்பிரமணியஐயர் ஆகியமூவரையும் நீக்கிவிடவேண்டு மென்று மனு செய்திருந்ததில் வழக்கு விசாரிக்கப்பட்டது. நீதிபதி வாதிகளின் மனுவைச் செலவு தொகையோடு தள்ளினதுமன்றிப் பிரதிவாதிகள் ஒவ்வொருவருக்கும் வக்கீல் செலவுதொகை ஐம்பதைம்பது ரூ கொடுக்கும்படி தீர்ப்புசெய்துவிட்டார்.

உள்ளூர் வர்த்தமானங்கள்

காலநிலை.

இவ்வாரம் சிறிது மழை பெய்தது என்றாலும் குளங்களில் நீர் குறைகிறதேயன்றி நிறைவுக்கு வழியைக் காணேம்.

பிரசங்கம்:—சிவன் கோவில் கொட்டகையில் வழக்கப்படி பிரசங்கம் நடந்து வருகிறது.

படிகளுக்கு முத்திரை:—திருவாடானை நீதிபதி யவர்கள், இவ்வூருக்கு இவ்வாரம் விஜயமானர்கள். அகவிலையைக்குறித்துப் படிகளைக்கொண்டுவந்து புது முத்திரைகள் போட்டு எடுத்துப் போகும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். பொது ஜனங்கள், இப்படி நன்மை செய்யும் உத்தமர்களைக்கொண்டாடுவதற்குஞ் சந்தேகமா?

திருட்டு:—சென்றவாரம் செங்கற்கோவிலார் வீதியில், மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாசஞ் செட்டியாரவர்கள் வீட்டில், சில மாடுகள் களவு போய்விட்டதாய்க் கேள்வி. சொந்தக்காரர், அச்சமயம் ஊரிலில்லையாம். திருடர்கள் பாடுமுற்றிலும் ஒழிவதெப்போதோ தெரியவில்லை.

அடித்துவிட்டான்:—கீழ வயலில் ஒரு சேர்வைகாரன், தன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கு வந்த பொழுது, அந்த வீட்டுக்கிழவி காலை நீட்டியிருக்கக் கண்டு, தனக்கு மரியாதைக் குறைவு செய்தாளென்று, அவளை நையப்புடைத்து விட்டானும். அவளை இவ்வூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவனும் ஒட்டக்கூத்தனே?

லண்டனுக்குப் போய் வந்த மகா-ா-ா-ஸ்ரீ சா. ராம. மு. அண்ணாமலை செட்டியாரவர்கள், டிப்டி கலெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ நாகசுந்தரமய்யரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் [illegible]ராணுகோத்தானில் செய்த உபந்யாசம்.

கனவான்களே!

நாங்கள் ஐரோப்பா முதலான தேசங்களுக்குச் சென்று திரும்பினதில் தங்களுக்குண்டான சந்தோஷத்தின் நிமித்தியாக,இந்நகரத்தாரும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி மற்றைய கனவான்களும், இந்தமகாசபையில் கூடி எங்களைக் கவுரவித்ததற்காக,நாங்கள் மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாக விருக்கின்றோம்.இத்தகையகவுரவத்தையடைவதற்குத்தக்கதோர் பெருங்காரியத்தையும்நாங்கள் செய்துவிடவில்லை, தாய்தந்தையர் தாங்களருமையாகப்பெற்று வளர்த்த குழந்தை சிறியதோர் காரியத்தைச்செய்யினும் பெரிதாகவெண்ணிமனம் பூரித்தவர்களாகி அக்குழந்தையைக் கட்டித்தழுவி முத்தமிட்டு அதிபுத்திசாலி மகாமேதாவியென்று பலவாறுக உயர்த்திப்பேசுவதுபோல எங்களிடத்தில் இந்நகரத்தாருக்குள்ள அன்பு மிகுதியால் நாங்கள் அரும் பெரும் காரியமொன்றைச் செய்ததாக வெண்ணி இந்தக் கவுரவத்தைக் கொடுத்தார்களென்று நினைக்க வேண்டியதாக விருக்கின்றது.

தற்காலத்தில் எவ்வகையிலும்மிகமேம்பாடடைந்திருக்கும் மேல்நாடுகளைப் பார்த்து வரவேண்டுமென்ற எண்ணம்சிலவருஷகாலமாக என்மனதிலே குடிகொண்டிருந்ததானாலும்மாகிமைதங்கியசமது சக்கிரவர்த்தியாரின் மகுடாபிஷேக வைபவமானது எமதெண்ணம் நிறைவேறுவதற்குக் காரணமாயிற்று. பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்குத் தலைமைப்பட்டினமாகிய லண்டன் நகரமானது இவ்வுலகத்திலேயுள்ள எல்லாப் பட்டணங்களிலும்பெரிதாக வுள்ளது; அதன்ஜனத்தொகைசுமார்70லட்சம். அதாவது மைசூர் திருவாங்கூர் இரண்டு சமஸ்தானங்களின் ஜனத்தொகைக்குச் சற்றேறக்குறைய ஸமமாகவுள்ளது. முடிசூட்டு வைபவகாலத்தில் லண்டன் நகரத்துக் காட்சியைப்பற்றி கவேலவலோராலும் தக்கவாறு சொல்லுதல் எளிதல்லவென்றால்,எம்போன்றோர்க்கது சாத்தியமேயில்லை.உலகத்திலுள்ளபற்பலதேசத்து இராஜகுமாரர்களும் பிரதிநிதிகளும் விஜயமாகி யிருந்தார்கள். சுமார்75000 போர்வீரர்கள்அக்காலத்தில் அங்கு கூட்டப்பட்டிருந்தார்கள். தீபாலங்காரத்திற்காகவும் கொடியலங்காரத்திற்காகவும் அங்கத்தாரால்செலவுசெய்யப்பட்ட தொகை சுமார் முப்பத்தேழு லட்சம் என்று மதிப்பிடப்பட்டதென்றால் மற்றுமுள்ள செலவுகளையும் லண்டன் நகரத்தில்அக்காலத்திலிருந்திருக்கக் கூடியகஷ்டியையும்பற்றிஒருவர்சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம். ராஜபவனிவரும் தெருக்களிலே வீடுகளையைப் பெற்றோர்பெரும் திரவியம் திரட்டினார்கள்: ஒரு ஆஸனம் இருபது பவுனுக்கும் கிடைப்பதரிதாயிற்று. எங்களுக்குநமது சென்னைக் கவர்னர் ஸர் ஆர்தர்லாலி அவர்கள் லண்டனிலுள்ள [illegible] யா மந்திரியாருக்[illegible] [illegible]த்திலும் அம்மந்திரி[illegible] [illegible] முன்கவர்னரியிருடையவும்நமது சென்னை[illegible] அவர்களுடைய[illegible]ராகவிருந்த லார்ட் ஆம்[illegible] [illegible]யவும் பேட்டிகிடைக்கப்பெற்று அவ[illegible] பெருந்தகையாரது ஸகாயத்தால் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபேஎன்ற இடத்தில் சக்கிரவர்த்தியார் முடி சூட்டப்பெற்ற போதும் [illegible]தினம்.பக்கிங்ஹாம் அரண்மனைத்தோட்டத்தில் [illegible]லமைக்கப்பெற்றிருந்த இந்தியா ஆபீஸ் [illegible]ராண்டில் சக்கிரவர்த்தியார் தமது பத்தினியாருடன் பவனிவந்தபோதும் அவர்களைத் தெரிசிக்கும் பாக்கியத்தையடைந்தோம்.

[illegible]பிரிட்டிஷ் ராஜ்ஜியமானது சாமானிய[illegible]மன்று அது இவ்வுலகத்திலே சுமார் ஐந்தில் ஒருபாகம் பூமியையும் நான்கிலொருபாக ம் ஜனத்தொகையையும் கொண்டதாக விருப்பதால் மற்றெந்த தேசத்தையும் விடப் பன்மடங்கு விசாலமாக இருப்பதோடு இந்த ராஜ்ஜியத்தில் சூரியன் அஸ்தமிக்கிறதில்லை யென்ற ஓர் பெருமை யுடையதாகவுமிருக்கின்றது. அதன்கடற்படையும் தரைப்படையும்மிகமேம்பாடுபெற்றுள்ளன இத்தகையபெருமைவாய்ந்த பிரிடிஷ் ராஜ்ஜியத்தில் நமது இந்தியதேசமும் சேர்ந்திருப்பதைப்பற்றிநாம் மிகவும்பெருமை பாராட்டிக்கொள்ளலாம் நமதுதேசத்தில் பிரிடிஷ் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுமுன் அது பலவேறு அரசர்களால்ஆளப்பட்டு என்றும் ஓயாத சண்டைக்கும் ஒழியாத குழப்பத்திற்கும் இடமாகவிருந்தது. பிரிட்டிஷ்ராஜ்ஜியம்ஸ்தாபிக்கப் பட்ட பின்னர் அது சமாதானம் ஒழுங்கு என்னும் விலைமதிக்கக்கூடாத இரண்டு இரத்தினங்களையும் இன்னும் பலநன்மைகளையும் நமக்குக்கொடுத்திருக்கின்றது. ஆகையினாலே நமது தேசத்தில் பிரிட்டிஷாருடைய சம்பந்தம் என்றுமிருக்கவேண்டு மென்று நாம் மனப்பூர்வமாக விரும்புகிறோம். ராஜபக்தியில் நம்மிந்தியரினும் சிறந்தோர்உலகிலெப்பாகத்திலுமில்லை.சிலவருஷமாக வங்காளநாட்டிலும் வடஇந்தியாவில்இன்னும் சிற்சில இடங்களிலும் ராஜதுரோகமான செய்கைகள் செய்யப்பட்டு வருகின்றன. நமது தென்னிந்தியாவிலும் சிலர் அக்குற்றம் சாட்டப்பட்டார்கள். "கொற்றவனோடெதிர்மாறு பேச வேண்டாம்."

என்று நம்பெரியோர் கூறியபடி ராஜாங்கத்தாரிடத்தில் நமதுகுறைகளை நமது பிரிதிநிதிகள் மூலமாகத் தெரிவித்து நிவர்த்தித்துக் கொள்வது முறையே யன்றி, ராஜாங்க சக்கரம் சுலபமாய்ச் சுழலாவண்ணம் எதிர்மாறகப்பேசி ஜனங்களின்மனதைக்கெடுப்பதும் இன்னும் பல அடாதகாரியங்களைச் செய்வதும் மிகுந்தபாவத்தொழிலாகும். ஆனால் ராஜதுரோகச்செய்கைகள்செய்தவர்களாகக் கருதப்படுவோர், மிகச்சிலரேயன்றிபொதுவாக இந்நாட்டார்பிரிட்டிஷ்ராஜாங்கத்தாரிடத்தில் நம்பிக்கையும் அன்பும் அபிமானமும் கொண்டவர்களானராஜவிஸ்வாசிகளாகவேஇருக்கின்றனர்.சிறுபான்மையோரால் செய்யப்படும் துஷ்கிருத்தியங்கள் ராஜாங்கத்தார் நாட்டில் பொதுவாகவே பலகடுமையான சட்டதிட்டங்களை உண்டுபண்ணுவதற்குக் காரணமாக விருக்கின்றமையால் ராஜபக்தியிற் சிறந்த தேசாபிமானிகளும் பொதுஜனங்களும் சிற்சில ஸமையங்களில் கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

ஆனாலும் ராஜத்துரோகச் செய்கைகள் இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டன. இன்னும் சொற்பமிருப்பதாகக் கருதப்படுவதும் அதி சீக்கிரத்தில் வேரோடழிந்து போகுமென்று நாம் நம்பியிருக்கலாம். நமது நாட்டுக்கோட்டையார் பிரிடிஷ் ராஜாங்கத்தாரிடத்தில் மற்றெந்த வகுப்பாரையும் விட அதிக விஸ்வாஸமும் நன்றியறிதலுமுள்ளவர்களாகவிருக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் நமது சரித்திரத்தைச் சற்று ஆராய்ந்து பார்க்கும் காலத்தில் சுமார் நூற்றைம்பது வருஷகாலத்திற்கு முன் வரை நாம், நிரம்பச் சாமானியமான நிலைமையிலிருந்ததாகவும் பிரிட்டிஷ் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னரே அதனாலேற்பட்ட பல சௌகரியங்கள் காரணமாக நாம் அயல் நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் செய்யத் தொடங்கினதாகவும் ஏற்படுகின்றது. தற்காலம் நாம் வியாபாரம் செய்யும் நாடுகளில் செய்கோன் என்ற பிரான்சுக்காரருக்குச் சொந்தமாயுள்ள ஒரு நாட்டைத் தவிர மற்றைய தேசங்களெல்லாம் பிரிட்டிஷாராலேயே ஆளப்படுபவைகள். நமது வியாபார விருத்திக்கும் செல்வப் பெருக்கிற்கும் பிரிட்டிஷ் ராஜாங்கமே முதற்காரணமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆகையினாலே நமது பிரிட்டிஷ் அரசரை நாம் தெய்வமாகக் கொண்டாடவேண்டுமென்று நான் சொல்லுவது மிகையாகமாட்டாது.

மேலும், "குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற,புதல்வர்க்குத் தந்தையும் தாயும், அறவோர்க்-கடிகளே தெய்வ மனைவோர்க்கும் தெய்வம்; இலைமுகப் பைம்பூணிறை" என்று நம் ஆன்றோர் கூறியப்படி ஒவ்வொருவரும் அரசனைத் தெய்வமாகக் கருதவேண்டுமென்று ஏற்படுகிறது.

எங்களது சுற்றுப் பிரயாணத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள ஈஜிப்டு தேசத்திலும் ஐரோப்பாவிலுள்ள இட்டாலி, ஸ்விட்ஜர்லாண்டு, ஆஸ்டிரியா,ஜர்மனி,பிரான்ஸ், இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு, ஐர்லாண்டு, இந்த தேசங்களிலுமுள்ள பிரதானமான நகரங்களைப் பார்த்தோம். எங்களுடன் ஐரோப்பிய சிநேகிதர் ஒருவர் வந்தமையால் அது எங்களுக்குப் பெரிதும் உதவியாக விருந்தது.

கடற் பிரயாணம் சுமார் இருபது நாட்களாகின்றனவானாலும்இக்காலத்திய கப்பல்கள் பிரயாணிகளுக்கு வேண்டிய ஸௌகரியங்களனைத்தையும் அமைக்கப்பெற்றதாய் மிதக்கும் ஓர் அரண்மனையைப் போலவே காணப்படுவதால் மிகுந்த சந்தோஷமாகவே பிரயாணம் செய்து வரலாம். நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட "மற்கோனீ டெலிகிராம்" என்னும் கம்பி யில்லாத தந்தி இந்தக் கப்பல்களில் அமைக்கப் பெற்றிருப்பதால் கப்பற் பிரயாணிகள் தாங்கள் நடுச் சமுத்திரத்தில் பிரயாணம் செய்யும் காலத்தில் கூட கரையிலுள்ளவர்களைப் போல உலகத்துச் சமாச்சாரங்களை கப்பலில் பிரசுரிக்கப்படும் சமாசாரப் பத்திரிகையின் மூலமாகத் தெரிந்துகொள்ள ஏதுவாகின்றது, ஐரோப்பா தேசத்தில் ரயில் வண்டித் தொடர்கள் ஒரு மணி நேரத்திற்கு அறுபது எழுபது மைல் தூரம் ஓடுகின்றன. ஐரோப்பிய நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்வது அதிகப் பணச் செலவுள்ள தானாலும் நம்மிற் சிலர் எதிர்பார்த்தபடி பத்தாயிரக்கணக்கானதொகைசெலவாகிறதற்கிடமில்லை. எங்களில் ஒவ்வொருவருக்கும் எழாயிரம்ரூபாய்களுக்குள்ளாகவேசெலவாகியிருக்கின்றது. நம் ஜாதியாரிற் சிலர் கப்பற் பிரயாணம் செய்வது தமது குடும்பத்தின் கௌரவத்துக்குக் குறையுண்டாகுமென்று சில காலங்களுக்கு முன்வரை நினைத்திருந்ததாகத் தெரிகிறது. உலகத்தில்பெரும்பணம் படைத்த பிரபுக்களும் தேசங்களையாளும் அரசர்களும் அந்நிய நாட்டு யாத்திரை செய்வதைக் கட்டாயமாகவும் கவுரவமாகவும்எண்ணி மாதக்கணக்காயும் வருஷக் கணக்காயும் கப்பலிலே யாத்திரை செய்யும்போது மிகச் சாமானியரான நாம் ஏன் செய்யக்கூடாது. அந்நிய நாடுகளின் செல்வத்தையும் நாகரீகத்தையும் பற்றி நாம் ஏதுமறியாமல், நமது செல்வத்தையும் நாகரீகத்தையும் பற்றியே பெருமை பாராட்டுகின்றோம்.

நம்மவரிற்பலர் மேல்நாடுகளுக்குப்போய் வரவேண்டியதவசியம்.ஐரோப்பாவிலே சுற்றுப்பிரயாணம் செய்வோர்இங்கிலீஷ்பாஷையிற் பெரும் பரீட்சைகளிற்றேறினவர்களாக வில்லாவிட்டாலும்அப்பாஷையிற் போதிய அறிவுடையவர்களாக விருக்கவேண்டியது நிரம்ப அவசியம். எங்கள் சுற்றுப்பிரயாணத்தில் நமது நாட்டுவேலைக்காரர்களைநாங்கள் வைத்துக்கொள்ளவில்லை ஐரோப்பிய வேலைக்காரர்கள் நமது நாட்டு வேலைக்காரர்களைக் காட்டிலும் மிகுந்தஉபயோகமுள்ளவர்களாக இருக்கிறார்கள் நாங்கள் ஐரோப்பிய உணவு தான் வைத்துக்கொண்டோம். அது எங்கள் தேக சௌக்கியத்திற்கு எவ்வித குறைவையும் உண்டுபண்ணவில்லை சீமைக்குப் போகின்றவர்கள் கோமாம்ஸம் புசிக்காமலும், விஸ்கி, ஷாம்பியன் முதலானமஸ்துள்ள பானபதார்த்தங்களை யருந்தாமலும் இருப்பது சாத்தியமில்லையென்று நம்மவர் சிலர் நினைப்பது பேதமையேயாகும். சீமைக்குப்போனதினாலே ஒருவன் தனக்கு வேண்டாத பதார்த்தங்களையும் உபயோகித்துத்தான் தீரவேண்டுமென்பது அவசியமில்லை ஐரோப்பாவிலே மாம்ஸத்தையே விலக்கி, காய்கறிபதார்த்தங்களை மட்டிலும் புசிப்பவர்களாயும், மதுபானத்தை விலக்கி ஐரோப்பியரிலேயே அநேக ரிருக்கின்றனர். ஆனால் நமது வைதிகர், புரமதத்தாராலும் தாழ்ந்த ஜாதியாரெனக்கருதப்படுவோராலும் தீண்டப்படும் பண்ட பதார்த்தங்களைப்புசித்தல் கூடாதென ஆக்ஷேபிக்கக் கூடும். இந்த ஆக்ஷேபணையை ஒருசிறிதும் லட்சியம்செய்யோர் ஐரோப்பாதேசத்துக்குப் போய் வரவேண்டுமென்னும் எண்ணத்தைச் சொற்பனத்திலும் கொள்ளவேண்டுவதில்லை.

நம்மால் நீசர்களாகக் கருதப்படும் ஐரோப்பியர், கல்வி, நாகரீகம், முதலிய எவ்வகையிலும் நம்மைக்காட்டிலும் அதிக மேம்பாடடைந்து நம்மையும் ஆளுகின்றனர். உலகத்தில் பெரும் பாகத்தையும் ஆளுகின்றார்கள். ஜாதி வேற்றுமை பாராட்டும் விஷயத்திலே நமது ஊக்கத்தைச் சிறிது தளர்ச்சியடையச் செய்வது நம் தேசநன்மைக் கிடமாகும். இந்தியா மந்திரியாரின் சபையில் இந்திய மெம்பர்களுள் ஒருவரான மிஸ்டர் குப்தாவுக்கு "சர்" என்ற பட்டம் சமீபத்தில் கொடுக்கப்பட்டத்தை யுத்தேசித்து லண்டன் நகரத்திலே Complimentary Lunch என்னும் உபசார விருந்தொன்று செய்யப்பட்டபோது பரோடா மகாராஜாவைப் போன்ற இந்திய மன்னர்கள் பலரும் ஐரோப்பியரும் மகமதியரும் நம்மால் உயர்குலத்தோரெனக் கருதப்படுவோரானபிராமணர்களும்மற்றையவகுப்பாரும்எவ்வித வேற்றுமையுமின்றிஒரே மேஜையிலிருந்து போஜனம் பண்ணின[illegible] பார்த்தேல [illegible] நம அறிகுறியென்றே சொல்லலாம்.

ஐரோப்பாவில் நாங்கள் சுற்றுப் பிரயாணம் செய்த காலம் அதிகமில்லாவிட்டாலும் அத்தேசத்தின் கல்வி, நாகரீகம் கைத்தொழில் வர்த்தகம் முதலானவைகளைப் பற்றியும் அந்நாட்டாரது பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஒருவாறு தெரிந்துகொண்டோம். அந்த நாட்டிலுள்ள பல கைத்தொழிற் சாலைகளையும், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் முதலான இடங்களிலுள்ள பல கலாசாலைகளையும் பார்லிமெண்டு மகா சபைகளையும் பார்த்தோம். பார்லிமெண்டில் லார்ட்ஸ் சபையை நாங்கள் பார்த்தபொழுது மகா ராஜதந்திர நிபுணர்களான லார்ட் மார்லி ஒரு கட்சியிலும், லார்ட் லாண்ட்ஸ் டவுன், மற்றொரு கட்சியாலுமாக Veto Bill என்ற ஓர் முக்கியமானவிஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்,எங்களது சுற்றுப்பிரயாணத்தில் நாங்கள் பார்த்த ஒவ்வொரு நகரங்களைப்பற்றியும் அங்கங்குள்ள பற்பல அதிசயங்களைப்பற்றியும் இங்கு விஸ்தாரமாக எடுத்து சொல்லுதல் சாத்தியமில்லை. ஐரோப்பியநாட்டாருக்கு அந்நாட்டின் சீதோஷ்ணஸ்திதியானது அவர்கள் செய்யும் பலதொழில்களுக்கு மிகவும் உபகாரமாக இருக்கின்றது. சுகாதார விஷயத்தில் அவர்கள் காட்டும் ஊக்கம் வியக்கத்தக்கது. உலகத்தார் பிரமிக்கும்படியான பல காரியங்களை அந்நாட்டார் இயந்திரங்களின் உதவியால் செய்கின்றனர். லண்டன் நகரத்திலே பூமியின் 60 அடிக்குக் கீழே ரயில் வண்டித்தொடர்கள் ஓடுவதையும், லார்ட்ஸ் சபையார் பேசும் பேச்சுகளை அதே சமயத்தில் லண்டன் கவுண்டி கவுன்ஸில் ஹாலில் என்னு மிடத்தில் எழுதும் இயந்திரத்தையும், பறக்கும் இயந்திரத்தில்ஒருவன் ஒன்றேகால் மணி நேரத்தில் தொண்ணூற்று நான்கு மைல் தூரம்பறந்ததையும்பார்க்கும்போது அத்தேசத்தாரின் மகா ஆச்சரியமான புத்தியின் பெருமை விளங்குகின்றது. இயந்திரங்களினுதவியினாலே அத்தேசத்தார் மிகுந்த திரவியக் குவியல்களைத் திரட்டி மகா செல்வவான்களாக விருக்கின்றனர். Duke of Devonshire என்னும் ஓர் பிரபுவின் கோட்டை வாசஸ்தலத்தில் தினச்செலவு இருநூறு பவுனென்று செலவப்படுகிறது. இந்த ஸ்தலத்தை நாங்கள் பார்த்தோம். அதின் அழகைப்பற்றிச் சுருக்கமாக எழுதினாலும் அது ஓர் பெரும் புத்தகமாய் விடும். இவரைப்போல இன்னும் எத்தனையோ பிரபுக்கள் அத்தேசத்திலிருக்கிறார்கள் அவர்களது செல்வத்தை நோக்குங்கால் நமது நாட்டில் பெரும் பணம் படைத்தவர்களெனக்கருதப் படுவோரது செல்வம் ஓர் அணுவாகத் தோற்றப்படும். இங்கு நான்கு அணாவிற்குக் கிடைக்கும் கூலியாள் ஒருவனுக்கு இங்கிலாந்தில் நாலு ஷிலிங் அதாவது மூன்றுரூபாயும் தச்சன்கொத்தனுக்குத் தினம் ஐந்து ஆறுரூபாயும் கூலி கொடுக்கின்றார்கள். தெருக்குப்பையைக்கூட்டுகிறவன்மாதம்ஒன்றுக்கு அறுபதுரூபாய் முதல் எழுபத்தைந்து ரூபாய் வரை சம்பளம் கொடுக்கப்படுகின்றான். கல்வியும் ஒற்றுமையும் பரஸ்பரநம்பிக்கையும் ஊக்கமும் விடாமுயர்ச்சியுமே அந்நாட்டார் தற்கால மகோன்னத பதவிக்குக் காரணமாகும். உலகத்தில் நாகரீகம் பெற்ற எந்தத் தேசத்திலும் படிப்பு கட்டாயமாக ஏற்பட்டிருக்கின்றது. தெருக்குப்பை கூட்டுபவன்கூட சமாசாரப்பத்திரிகைகளை வாசித்துச்சமயம் வாய்க்கும்போது தேச நடவடிக்கையில் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து வாதாடுகின்றான் ஐர்லண்டு தேசத்திலே கில்லார்னிலேக்என்ற ஒரு ஏரியில் ஒரு போட்டில் ஒரு நாலாயங்கால வேளையில் எனது சிநேகிதர்களுடன் நான் போய்க்கொண்டிருக்கும் பொழுது அப்போட்டைத் தள்ளுவோன் சொன்ன ஓர் விஷயத்தைக் கேட்கமிகவும் ஆச்சரியமாயிருந்தது. ஐர்லாண்டு தேசத்திற்கு சுவராஜ்ய சுவதந்திரம் வேண்டுமென்று தம்நாட்டார் வெகுகாலமாக வேண்டி வருவதாகவும் அது இப்போதுள்ள லிபரல் கவர்ன் மெண்டாரால் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கை உண்டாகி இருப்பதாயும் ஐர்லண்டுதன்னைக் காப்பாற்றிக் கொள்ள, கரைப்படையும் தரைப்படையும் தன் சொந்தத்தில்வைத்துக்கொள்ளச் சக்தியில்லாதிருப்பதால் பிரிட்டிஷாரின் சம்பந்தம் எப்போதும் வேண்டுமென்றும்சொன்னான். கேவலம் ஒரு படகு தள்ளுவோனுக்கு தேசநடவடிக்கையில் இவ்வளவு அறிவு ஏற்பட்டிருப்பது கட்டாயப் படிப்பின் பலனாகும். நமது இந்தியாவில் கட்டாயப்படிப்பில்லாமையினால் பெரும் பான்மையோர் எவ்வித ஞானமுமின்றி இருளடையப் பெற்றிருக்கின்றனர். நமது இந்தியா தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் நூற்றிற்கு ஆறுபேர் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களென்றால் கல்வி விஷயத்தில் நமது தேசத்தின் துக்கக்கரமான நிலைமை நன்கு புலப்படும்.

இவ்விஷயமாய்த் தற்காலம் இந்திய சட்டஸபையிலே ஆனரபிள் மிஸ்டர் கோகலேயால் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா சட்டமாகிவிட்டால் [illegible] கல்வி விஷயத்தில் நமதுதேசம்பெரிதும் மேன்மையடையு மென்பதிற் சந்தேகமில்லை நம் நாட்டுக் கோட்டையாருள் கட்டாயப்படிப்பில்லா விட்டாலும் அது இருப்பது போலவேநம்முள் ஆண்பாலர் ஒவ்வொருவரும் படித்திருக்கின்றார்கள். கையெழுத்துபோடத்தெரியாத தற்குறிகள் நம் ஜாதியாரில் இல்லையென்றேசொல்லலாம். நம்மில்உயர்தரக்கல்விபெற்றோர் பலர் இருப்பினும் பெரும்பான்மையோரின் படிப்பு, பெரும்பாலும் திண்ணைப் பள்ளிக்கூடத்தோடே நின்று விடுகின்றது. அத்திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மட்டிலும் வாசித்த ஒருவரைப்பார்த்து ஆஸ்டிரெலியாதேசம் எந்தத் திசையிலிருக்கிறதென்று கேட்கும் பட்சத்தில் ஆஸ்டிரெலியா என்று ஒருதேசமிருக்கிறதென்றுவது அது இன்ன திசையிலிருக்கிறதென்றுவது சொல்லத் தெரியாது திகைத்து நிற்பார். "தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு."

மணற்றரையிலே தோண்டப்பட்டுள்ள ஓர்கேணியில் அதன் ஆழத்துக்குத் தக்கபடி ஜலம்ஊறுவதுபோல நாம் கற்ற அளவிற்குத்தான் நமக்கு அறிவு ஏற்படுமென்று நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் கூறியுள்ளார்.

ஆகையினாலே பூகோளசாஸ்திரமும் தேச சரித்திரங்களும் அவசியம் கற்பிக்[illegible] வேண்டும். நாமும் மற்றய ஜாதிபோல மேம்பாடடைய வேண்டு[illegible] நமது தமிழ்ப்பாஷையைஇன்னும் அதிகமாகக் கற்பதோடு முக்கிய இங்கிலீஷ் பாஷையை நாம் கற்றுக்[illegible]ளவேண்டியது இன்றியமையாத[illegible]ம். இங்கிலீஷ் பாஷையைக் கற்பதினாலுண்டாகும் நன்மைகள் கணக்கிலடங்கா. அது நமது இராஜபாஷையாக இருப்பதோடு உலகத்தில் பெரும்பாகத்தாரால் பேசப்படுவதாகவுமிருக்கிறது. உலகத்தில் எந்தத்தேசத்திற்குப் போனாலும் இங்கிலீஷ்பாஷை பேசுவோர் காணலாம். இந்த இங்கிலீஷ்பாஷையொன்றை மட்டும் நாம் கற்றிருந்தால் உலகத்தின் எப்பாகத்திலும் யாதொரு கஷ்டமின்றிச் சுற்றுப் பிரயாணம் செய்யலாம். சைனா, ஜப்பான் முதலான [illegible]ய நாடுகளில் அத்தேசங்களது [illegible]ன்மென்டாரே இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து அந்நாட்டுப்பிள்ளைகளுக்கு அப்பாஷையைக் கற்பிக்கின்றனரென்றால் அப்பாஷைக் கேற்பட்டிருக்கும் பெருமையும், அவசியம்தேவையும் நாம் அந்த விஷயத்தில் எவ்வளவு ஊக்கங் காட்டவேண்டுமென்பதும்சொல்லாமலே விளங்கும். வியாபார விஷயத்தில் நாம் சிறிது ஊக்கங் காட்டிவருவதுமாக நம் சிநேகிதர்களான வக்கீல் [illegible] உத்தியோகஸ்தர் முதலானோரும் [illegible] முறைப்படி இயந்திரங்களை ஸ்தாபிப் பல கைத்தொழில்களைச் செய்[illegible]டுமென்று நம்மிற் பல பிரமுகர் [illegible] காணும்போதெல்லாம் வற்புறுத்திச்சொல்லுகின்றார்கள். சிற்சில சமயங்களில் அக்காரியங்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் நமக்கும் தோன்றுகின்றது. இயந்திரங்களினுதவியினால் பெரும் பொருளீட்டுவது இக்காலத்தில் சாத்தியமேயானாலும் போதுமான கல்வியும் அநுபவமுமில்லாது நூதனத் தொழிலைச் செய்ய எத்தனிப்பது நஷ்டத்திற்கே ஏதுவாகும். [illegible]நாட்டார் ஒரு தொழிலைச் செய்யுமுன் அதைப்பல வருஷகாலம்பிரயாசைப்பட்டுக்கற்றும்அன்னிய நாடுகளுக்குச் சென்று அதின் மர்மங்களை யறிந்தும் பின்னரே அத்தொழிலைச் செய்யத் தொடங்குகின்றனர். போதுமான கல்வியையும் நூதனத் தொழில்களின் அநுபவங்களையும் நாம் அடையும்வரை, அநுபவத்துவரை க்ஷேமத்தைக் கொடுத்த பழைய தொழில்களையே கைக்கொள்ளவேண்டும். நமது கவனமெல்லாம் தற்காலம் இங்கிலீஷ் பாஷையை நம்முள் அபிவிருத்தி செய்வதிலேயே செலுத்தவேண்டும். நமது புராதன வழக்கங்கள் சில நம் கல்வி யபிவிர்த்திக்குத் தடையாக நிற்கின்றன. இங்கிலாந்து தேசத்தில் ஆண் பெண் இருபாலரும் பதினைந்து வயதடையும்வரை பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படித்து வரவேண்டுமென்று தேசச்சட்ட மேற்பட்டிருக்கின்றது. நமது ஜாதியாரில் சற்றேறக்குறைய இந்தப் பதினைந்து வயதிலே ஒரு ஸ்திரீக்குக் குழந்தையில்லாவிட்டால் அரச விருக்ஷம் சுற்றுதல் நிர்ஜலவிருதமிருத்தல், சுந்தரகாண்ட பாராயணம் செய்வித்தல், இராமேசுவரம் திருப்பதி முதலான ஸ்தல யாத்திரைகளும் திவ்ய தேச யாத்திரைகளும் செய்தல், இவ்விதமாக மக்கட்பேறு பெறக் கடுந்தவம் புரிகின்றதாக விருக்கின்றது. இதற்கு நம் சிமாட்டிகளே முதற்காரணமாவார்கள். கல்வியாவது நாகரீகப் பழக்கமாவது சிறிதுமில்லாமையின் பலன் தானிது. இங்கிலாந்தில் சுமார் இருபத்தைந்து வயதுடைய ஒரு புருஷனையாவது ஸ்திரீயையாவது உனக்கு விவாகமாய் விட்டதாவென்று கேட்போமானல் "எனக்கா!" வென்று ஆச்சரியக்குறி காட்டி விவாகம் செய்துகொள்ளத்தக்க வயது இன்னும் வரவில்லையென்று பதில் சொல்லுகின்றார்கள்.

Scire the cage first and then catch the bird என்று இங்கிலீஷிலே பழமொழி யொன்றுண்டு. அதற்குக் கூண்டை சம்பாதித்துக்கொண்டு பக்ஷியைப் பிடி என்றர்த்தமாகும். இங்கிலாந்திலே ஒருவன் விவாகமானபின், தன் மாதா பிதாக்களுடனாவது சகோதரர்களுடனாவது ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்கும் வழக்கம் பெரும்பாலுமில்லை. தனக்கென்று தனி இருப்பிடம் சம்பாதித்துக்கொள்ளவும், குடும்ப பாரத்தை ஏற்றுக்கொள்ளவும் ஒருவன் சக்தியுள்ளவனான பின்புதான் விவாகம் செய்து கொள்கிறார்கள். நமக்குள் ஆகவேண்டிய ஆசாரச் சீர் திருத்தங்கள் ஒன்று அல்லது இரண்டு நாள்களிலேயாவது அல்லது ஒரு வருஷம் இரண்டு வருஷங்களிலாவது ஆகமாட்டா. நாம் கல்வியையும் முக்கியமாய்இங்கிலீஷ்பாஷையையும் நம்முள் அபிவிருத்தியடையச் செய்வோமானல், ஆசாரத்திருத்தங்களும், மற்றுமுள்ள நாகரீகங்களும் தானேயுண்டாகும். முக்கியமாய் நாம் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டிய தவசியம். நமது ஜாதியார் மேம்பாடடையவேண்டியதற்குத் தற்காலம் நாம் முக்கியமாய்ச் செய்யவேண்டிய காரியம் யாதென யாரேனு மொருவர் வினவும் பக்ஷத்தில், இங்கிலீஷ் பாஷையை அப்பியஸிப்பதுதானென்று பளிச்சென நான் உறுதியாகப்பதில் சொல்லுவேன். இங்கிலீஷ் பாஷையைக் கற்பதினாலுண்டாகக் கூடிய நன்மைகள் கணக்கிலடங்க மாட்டாவென்று ஏற்கனவே சொன்னேன். அதனல் நாம் நாகரீகத்தையும் வியாபாரப் பெருக்கையும் செல்வ மிகுதியையும் கௌரவத்தையும் அடைந்து மற்றைய வகுப்பாரைப் போல உன்னத பதவிக்கு வரலாம். நம் ஜாதியாரிற் பிரமுகர்களாக உள்ளவர்கள் தங்கள் தங்கள் ஊர்களிலே இங்கிலீஷ் கலாசாலைகளை ஸ்தாபித்து அப்பாஷையைக் கற்பதனாலுண்டாக்கூடிய பல நன்மைகளைப் பெற்றோர்களுக்குத் தெரிவித்துப்பிள்ளைகளைப் படிக்கச் செய்தல் வேண்டும். ஆரம்பத்தில் எந்த விஷயமும் சிறிது கஷ்டமாகவே தோற்றப்படும். நமது ஜாதியார் மேன்மை யடையவேண்டியதைக்கருதிச் சிறிது ஊக்கமுள்ளவர்களாக விருப்பார்களானல் சொற்ப காலத்திற்குள்ளாக நமது நகரங்களிலே அநேக இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அநேக ஆயிரம் பிள்ளைகளும் அப்பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்களாக விருப்பார்களென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

"குடி செய்வலென்னு மொருவற்குத் தெய்வ மடிதற்றுத் தான் முந்துறும்"

என்று நம் நாயனர் கூறியபடி எமது குடியினையுயர்ச் செய்யக் கடவேமென்று கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவருக்குத் தெய்வமும் துணையாக முன் வந்து நிற்கும்.

கனவான்களே!

மகா புத்திமான்கள் நிறைந்த இந்த சபையிலே உங்களுக்குத் தெரியாத விஷயங்களை நான் எடுத்துச் சொல்ல வந்ததாகச் சிறிதேனும் கருதக்கூடாது. இக்காலத்தில் எவ்விதப்பெருமை யடைவதற்கும் இங்கிலீஷ் பாஷையை முக்கியமாய் நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றவிஷயத்திலும் மற்றும் நான் சொன்ன விஷயங்களிலும்எனதபிப்பிராயத்தைத்தெரிவித்தேன். பிழைகளேதுமிருப்பின் மன்னித்தல் வேண்டும்,

எங்களைக் கவுரவித்தற் பொருட்டு இங்கு விஜயமாகி யிருக்கின்ற கனவான்களுக்கும் அக்கிராசனத்தை வகித்த நமது Popular டிவிஷனல் ஆபீஸரான மிஸ்டர் நாகசுந்திர மய்யரவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நாங்கள் வந்தனமளிப்பதை அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றோம்.

SUPPLEMENT.

லண்டனுக்குப் போய் வந்த மகா-ள-ள-ஸ்ரீ சா. ராம. மு. அண்ணாமலைச்செட்டியாரவர்கள், டிப்டி கலெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ நாகசுந்தரமய்யரவர்கள் அக்கிராசனத்தின் [illegible] ராணுகோத்தானில் செய்த உபந்யாசம்.

கனவான்களே!

நாங்கள் ஐரோப்பா முதலான தேசங்களுக்குச் சென்று திரும்பினதில் தங்களுக்குண்டான சந்தோஷத்தின் றிகுறியாக, இந்நகரத்தாரும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி மற்றைய கனவான்களும், இந்தமகாஸபையில் கூடி எங்களைக் கவுரவித்ததற்காக, நாங்கள் மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாக விருக்கின்றோம். இத்தகைய கவுரவத்தையடைவதற்குத்தக்கதோர் பெருங்காரியத்தையும் நாங்கள் செய்து விடவில்லை. தாய்தந்தையர் தாங்களருமையாகப்பெற்று வளர்த்த குழந்தை சிறியதோர் காரியத்தைச்செய்பினும் பெரிதாகவெண்ணி மனம் பூரித்தவர்களாகி அக்குழந்தையைக் கட்டித்தழுவி முத்தமிட்டு அதிபுத்திசாலி மகாமேதாவியென்று பலவாறாக உயர்த்திப்பேசுவதுபோல எங்களிடத்தில் இந்நகரத்தாருக்குள்ள அன்பு மிகுதியால் நாங்கள் அரும் பெரும் காரியமொன்றைச் செய்ததாக வெண்ணி இந்தக் கவுரவத்தைக் கொடுத்தார்களென்று நினைக்க வேண்டியதாக விருக்கின்றது.

தற்காலத்தில் எவ்வகையிலும்மிக மேம்பாடடைந்திருக்கும் மேல்நாடுகளைப் பார்த்து வரவேண்டுமென்ற எண்ணம்சிலவருஷகாலமாக என்மனதிலே குடிகொண்டிருந்ததானாலும்மாட்சிமைதங்கியசம்ராட் சக்கிரவர்த்தியாரின் மகுடாபிஷேக வைபவமானது எமதெண்ணம் நிறைவேறுவதற்குக் காரணமாயிற்று. பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்குத் தலைமைப்பட்டினமாகிய லண்டன் நகரமானது இவ்வுலகத்திலேயுள்ள எல்லாப்பட்டணங்களிலும்பெரிதாக வுள்ளது. அதன் ஜனத்தொகைசுமார்70லட்சம். அதாவது மைசூர் திருவாங்கூர் இரண்டு சமஸ்தானங்களின் ஜனத்தொகைக்குச் சற்றேறக்குறைய ஸமமாகவுள்ளது. முடிசூட்டு வைபவகாலத்தில் லண்டன் நகரத்துக் காட்சியைப்பற்றி கலைவல்லோராலும் தக்கவாறு சொல்லுதல் எளிதல்லவென்றால், எம்போன்றோர்க்கது சாத்தியமேயில்லை. உலகத்திலுள்ளபற்பலதேசத்து இராஜகுமார்ர்களும் பிரதிநிதிகளும் விஜயமாகி யிருந்தார்கள். சுமார் 75000 போர்வீரர்கள் அக்காலத்தில் அங்கு கூட்டப்பட்டிருந்தார்கள். தீபாலங்காரத்திற்காகவும் கொடியலங்காரத்திற்காகவும் அந்நகரத்தாரால்செலவுசெய்யப்பட்ட தொகை சுமார் முப்பத்தேழு லட்சம் என்று மதிப்பிடப்பட்டதென்றால் மற்றுமுள்ள செலவுகளையும் லண்டன் நகரத்தில்அக்காலத்திலிருந்திருக்கக்கூடியகாக்ஷியையும்பற்றிஒருவர்சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம். ராஜபவனிவரும் தெருக்களிலே வீடுகளையைப் பெற்றோர்பெரும் திரவியம் திரட்டினார்கள்: ஒரு ஆஸனம் இருபது பவுனுக்கும் கிடைப்பதரிதாயிற்று. எங்களுக்கு நமது சென்னைக் [illegible] ஆர்தர்லாலி அவர்கள் லண்டனிலு[illegible] யா மந்திரியாருக்[illegible] த்தினால் அம்மந்திரி[illegible] ரியார்குடையவும்நமது சென்னையில் முன்கவ[illegible]னராகவிருந்த லார்ட் ஆம் [illegible] அவர்களுடை[illegible]யவும் பேட்டிகிடைக்கப்பெற்று [illegible] பெருந்தகையாரது ஸகாயத்தால் வெ[illegible] மின்ஸ்டர் ஆபேஎன்ற இடத்தில் சக்[illegible]வர்த்தியார் முடி சூட்டப்பெற்ற போதும் [illegible]தினம் பக்கிங்ஹாம் அரண்மனைத்தோட்ட[illegible] லைமைக்கப்பெற்றிருந்த இந்தியா ஆபீஸ் [illegible] பாண்டில் சக்கிரவர்த்தியார் தமது பத்தினி[illegible]ருடன் பவனிவந்தபோதும் அவர்களைத் தெ[illegible]சிக்கும் பாக்கியத்தையடைந்தோம்.

[illegible] ட்டிஷ் ராஜ்ஜியமானது சாமானிய[illegible] அது இவ்வுலகத்திலே சுமார் ஐந்[illegible]தில் ஒருபாகம் பூமியையும் நான்கிலொருபாகம் ஜனத்தொகையையும் கொண்டதாக விருப்பதால் மற்றெந்த தேசத்தையும் விடப் பன்மடங்கு விசாலமாக இருப்பதோடு இந்த ராஜ்ஜியத்தில் சூரியன் அஸ்தமிக்கிறதில்லை யென்ற ஓர் பெருமை யுடையதாகவுமிருக்கின்றது. அதன்கடற்படையும் தரைப்படையும்மிகமேம்பாடுபெற்றுள்ளன இத்தகையபெருமைவாய்ந்த பிரிடிஷ் ராஜ்ஜியத்தில் நமதுஇந்தியதேசமும் சேர்ந்திருப்பதைப்பற்றிநாம் மிகவும்பெருமை பாராட்டிக்கொள்ளலாம் நமதுதேசத்தில் பிரிடிஷ் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுமுன் அது பல வேறு அரசர்களால்ஆளப்பட்டு என்றும் ஓயாத சண்டைக்கும் ஒழியாத குழப்பத்திற்கும் இடமாகவிருந்தது. பிரிட்டிஷ்ராஜ்ஜியம்ஸ்தாபிக்கப் பட்ட பின்னர் அது சமாதானம் ஒழுங்கு என்னும் விலைமதிக்கக்கூடாத இரண்டு இரத்தினங்களையும் இன்னும் பலநன்மைகளையும் நமக்குக்கொடுத்திருக்கின்றது. ஆகையினாலே நமது தேசத்தில் பிரிட்டிஷாருடைய சம்பந்தம் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று நாம் மனப்பூர்வமாக விரும்புகிறோம். ராஜபக்தியில் நம்மிந்தியரினும் சிறந்தோர் உலகிலெப்பாகத்திலுமில்லை. சிலவருஷமாக வங்காளநாட்டிலும் வடஇந்தியாவில்இன்னும் சிற்சில இடங்களிலும் ராஜதுரோகமான செய்கைகள் செய்யப்பட்டு வருகின்றன. நமது தென்னிந்தியாவிலும் சிலர் அக்குற்றம் சாட்டப்பட்டார்கள். "கொற்றவனோடெதிர்மாறு பேசவேண்டாம்."

என்று நம்பெரியோர் கூறியபடி ராஜாங்கத்தாரிடத்தில் நமதுகுறைகளை நமது பிரதிநிதிகள் மூலமாகத் தெரிவித்து நிவர்த்தித்துக் கொள்வது முறையே யன்றி, ராஜாங்க சக்கரம் சுலபமாய்ச் சுழலாவண்ணம் எதிர்மாறாகப்பேசி ஜனங்களின் மனதைக்கெடுப்பதும் இன்னும் பல அடாதகாரியங்களைச் செய்வதும் மிகுந்தபாவத்தொழிலாகும்; ஆனால் ராஜதுரோகச்செய்கைகள்செய்தவர்களாகக் கருதப்படுவோர், மிகச்சிலரேயன்றிபொதுவாக இந்நாட்டார்பிரிட்டிஷ்ராஜாங்கத்தாரிடத்தில் நம்பிக்கையும் அன்பும் அபிமானமும் கொண்டவர்களானராஜவிஸ்வாஸிகளாகவேஇருக்கின்றனர். சிறுபான்மையோரால் செய்யப்படும் துஷ்கிருத்தியங்கள் ராஜாங்கத்தார் நாட்டில் பொதுவாகவே பலகடுமையான சட்டதிட்டங்களை உண்டுபண்ணுவதற்குக் காரணமாக விருக்கின்றமையால் ராஜபக்தியிற் சிறந்த தேசாபிமானிகளும் பொதுஜனங்களும் சிற்சில ஸமையங்களில் கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

ஆனாலும் ராஜத்துரோகச் செய்கைகள் இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டன. இன்னும் சொற்பமிருப்பதாகக் கருதப்படுவதும் அதி சீக்கிரத்தில் வேரோடழிந்து போகுமென்று நாம் நம்பியிருக்கலாம். நமது நாட்டுக்கோட்டையார் பிரிடிஷ் ராஜாங்கத்தாரிடத்தில் மற்றெந்த வகுப்பாரையும் விட அதிக விஸ்வாஸமும் நன்றியறிதலுமுள்ளவர்களாகவிருக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் நமது சரித்திரத்தைச் சற்று ஆராய்ந்து பார்க்கும் காலத்தில் சுமார் நூற்றைம்பது வருஷ காலத்திற்கு முன் வரை நாம், நிரம்பச் சாமானியமான நிலைமையிலிருந்ததாகவும் பிரிட்டிஷ் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னரே அதனாலேற்பட்ட பல சௌகரியங்கள் காரணமாக நாம் அயல் நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் செய்யத் தொடங்கினதாகவும் ஏற்படுகின்றது. தற்காலம் நாம் வியாபாரம் செய்யும் நாடுகளில் செய்கோன் என்ற பிரான்சுக்காரருக்குச் சொந்தமாயுள்ள ஒரு நாட்டைத் தவிர மற்றைய தேசங்களெல்லாம் பிரிட்டிஷாராலேயே ஆளப்படுபவைகள். நமது வியாபார விருத்திக்கும் செல்வப் பெருக்கிற்கும் பிரிட்டிஷ் ராஜாங்கமே முதற்காரணமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆகையினாலே நமது பிரிட்டிஷ் அரசரை நாம் தெய்வமாகக் கொண்டாடவேண்டுமென்று நான் சொல்லுவது மிகையாகமாட்டாது.

மேலும், "குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற, புதல்வர்க்குத் தந்தையும் தாயும், அறவோர்க்-கடிகளே தெய்வ மனைவோர்க்கும் தெய்வம்; இலமுகப் பைம்பூணிறை" என்று நம் ஆன்றோர் கூறியபடி ஒவ்வொருவரும் அரசனைத் தெய்வமாகக் கருதவேண்டுமென்று ஏற்படுகிறது.

எங்களது சுற்றுப் பிரயாணத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள ஈஜிப்டு தேசத்திலும் ஐரோப்பாவிலுள்ள இட்டாலி, ஸ்விட்ஜர்லாண்டு, ஆஸ்டிரியா, ஜர்மனி, பிரான்ஸ், இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு, ஐர்லாண்டு, இந்த தேசங்களிலுமுள்ள பிரதானமான நகரங்களைப் பார்த்தோம். எங்களுடன் ஐரோப்பிய சிநேகிதர் ஒருவர் வந்தமையால் அது எங்களுக்குப்பெரிதும் உதவியாக விருந்தது.

கடற் பிரயாணம் சுமார் இருபது நாட்களாகின்றனவானாலும்இக்காலத்திய கப்பல்கள் பிரயாணிகளுக்கு வேண்டிய ஸௌகரியங்களனைத்தையும் அமைக்கப்பெற்றதாய் மிதக்கும் ஓர் அரண்மனையைப் போலவே காணப்படுவதால் மிகுந்த சந்தோஷமாகவே பிரயாணம் செய்து வரலாம். நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட "மற்கோனி டெலிகிராம்" என்னும் கம்பியில்லாத தந்தி இந்தக் கப்பல்களில் அமைக்கப் பெற்றிருப்பதால் கப்பற்பிரயாணிகள் தாங்கள் நடுச் சமுத்திரத்தில் பிரயாணம் செய்யும் காலத்தில் கூட கரையிலுள்ளவர்களைப் போல உலகத்துச் சமாச்சாரங்களை கப்பலில் பிரசுரிக்கப்படும் சமாசாரப் பத்திரிகையின் மூலமாகத் தெரிந்துகொள்ள ஏதுவாகின்றது. ஐரோப்பா தேசத்தில் ரயில் வண்டித் தொடர்கள் ஒரு மணி நேரத்திற்கு அறுபது எழுபது மைல் தூரம் ஓடுகின்றன. ஐரோப்பிய நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்வது அதிகப் பணச் செலவுள்ளதாலும் நம்மிற் சிலர் எதிர்பார்த்தபடி பத்தாயிரக்கணக்கான தொகைசெலவாகிறதற்கிடமில்லை. எங்களில் ஒவ்வொருவருக்கும் ஏழாயிரம்ரூபாய்களுக்குள்ளாகவேசெலவாகியிருக்கும். [illegible] கப்பல் பிரயாணம் செய்து தமது குடும்பத்தின் கௌரவத்திற்குக் குறையுண்டாகுமென்று [illegible] காலங்களுக்கு முன்வரை நினைத்திருந்ததாகத் தெரிகிறது. உலகத்தில்பெரும்பணம் படைத்த பிரபுக்களும் தேசங்களையாளும் அரசர்களும் அந்நிய நாட்டு யாத்திரை செய்வதைக் கட்டாயமாகவும் கவுரவமாகவும்எண்ணி மாதக்கணக்காயும் வருஷக் கணக்காயும் கப்பலிலே யாத்திரை செய்யும்போது மிகச் சாமானியரான நாம் ஏன் செய்யக்கூடாது. அந்நிய நாடுகளின் செல்வத்தையும் நாகரீகத்தையும் பற்றி நாம் ஏதுமறியாமல், நமது செல்வத்தையும் நாகரீகத்தையும் பற்றியே பெருமை பாராட்டுகின்றோம்.

நம்மவரிற்பலர் மேல்நாடுகளுக்குப்போய் வரவேண்டியதவசியம். ஐரோப்பாவிலே சுற்றுப்பிரயாணம் செய்வோர் இங்கிலீஷ்பாஷையிற் பெரும் பரீட்சைகளிற்றேறினவர்களாக வில்லாவிட்டாலும் அப்பாஷையிற் போதிய அறிவுடையவர்களாக விருக்கவேண்டியது நிரம்ப அவசியம். எங்கள் சுற்றுப்பிரயாணத்தில் நமது நாட்டுவேலைக்காரர்களைநாங்கள் வைத்துக்கொள்ளவில்லை ஐரோப்பிய வேலைக்காரர்கள் நமது நாட்டு வேலைக்காரர்களைக் காட்டிலும் மிகுந்தஉபயோகமுள்ளவர்களாக இருக்கிறார்கள் நாங்கள் ஐரோப்பிய உணவு தான் வைத்துக்கொண்டோம். அது எங்கள் தேக சௌக்கியத்திற்கு எவ்வித குறையையும் உண்டுபண்ணவில்லை சமைக்குப் போகின்றவர்கள் கோமாம்ஸம் புசிக்காமலும், விஸ்கி, ஷாம்பியன் முதலானமஸ்துள்ள பானபதார்த்தங்களை யருந்தாமலும் இருப்பது சாத்தியமில்லையென்று நம்மவர் சிலர் நினைப்பது பேதமையேயாகும். சீமைக்குப்போனதினாலே ஒருவன் தனக்கு வேண்டாத பதார்த்தங்களையும் உபயோகித்துத்தான் தீரவேண்டுமென்பது அவசியமில்லை ஐரோப்பாவிலே மாம்ஸத்தையே விலக்கி, காய்கறிபதார்த்தங்களை மட்டிலும் புசிப்பவர்களையும், மதுபானத்தை விலக்கி ஐரோப்பியரிலேயே அநேகர் இருக்கின்றனர். ஆனால் நமது வைதிகர், புறமதத்தாராலும் தாழ்ந்த ஜாதியாரெனக்கருதப்படுவோராலும் தீண்டப்படும் பண்ட பதார்த்தங்களைப்புசித்தல் கூடாதென ஆக்ஷேபிக்கக் கூடும். இந்த ஆக்ஷேபணையை ஒருசிறிதும் லட்சியம்செய்வோர் ஐரோப்பாதேசத்துக்குப் போய் வரவேண்டுமென்னும் எண்ணத்தைச் சொற்பனத்திலும் கொள்ளவேண்டுவதில்லை.

நம்மால் நீசர்களாகக் கருதப்படும் ஐரோப்பியர், கல்வி, நாகரீகம், முதலிய எவ்வகையிலும் நம்மைக்காட்டிலும் அதிக மேம்பாடடைந்து நம்மையும் ஆளுகின்றனர். உலகத்தில் பெரும் பாகத்தையும் ஆளுகின்றார்கள். ஜாதி வேற்றுமை பாராட்டும் விஷயத்திலே நமது ஊக்கத்தைச் சிறிது தளர்ச்சியடையச்செய்வது நம் தேசாபிமானத்திற்கு இடமாகும். இந்தியா மந்திரியாரின் சபையில் இந்திய மெம்பர்களுள் ஒருவரான மிஸ்டர் குப்தாவுக்கு "சர்" என்ற பட்டம் சமீபத்தில் கொடுக்கப்பட்டதை யுத்தேசித்து லண்டன் நகரத்திலே, Complimentary Lunch என்னும் உபசார விருந்தொன்று செய்யப்பட்டபோது பரோடா மகாராஜாவைப் போன்ற இந்திய மன்னர்கள் பலரும் ஐரோப்பியரும் மகமதியரும் நம்மால் உயர்குலத்தோரெனக் கருதப்படுவோரான பிராமணர்களும்மற்றையவகுப்பாரும்எவ்வித வேற்றுமையுமின்றி ஒரே மேஜையிலிருந்து போஜனம் பண்ணின[illegible] பார்த்தேன். [illegible] அறிகுறியென்றே சொல்லலாம்.

ஐரோப்பாவில் நாங்கள் சுற்றுப் பிரயாணம் செய்த காலம் அதிகமில்லாவிட்டாலும் அத்தேசத்தின் கல்வி, நாகரீகம் கைத்தொழில் வர்த்தகம் முதலானவைகளைப் பற்றியும் அந்நாட்டாரது பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஒருவாறு தெரிந்துகொண்டோம். அந்த நாட்டிலுள்ள பல கைத்தொழிற் சாலைகளையும், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் முதலான இடங்களிலுள்ள பல கலாசாலைகளையும் பார்லிமெண்டு மகா சபைகளையும் பார்த்தோம். பார்லிமெண்டில் லார்ட்ஸ் சபையை நாங்கள் பார்த்தபொழுது மகா ராஜதந்திர நிபுணர்களான லார்ட் மார்லி ஒரு கட்சியிலும், லார்ட் லாண்ட்ஸ் டவுன், மற்றொரு கட்சியாலுமாக Veto Bill என்ற ஓர் முக்கியமானவிஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். எங்களது சுற்றுப்பிரயாணத்தில் நாங்கள் பார்த்த ஒவ்வொரு நகரங்களைப்பற்றியும் அங்கங்குள்ள பற்பல அதிசயங்களைப்பற்றியும் இங்கு விஸ்தாரமாக எடுத்து சொல்லுதல் சாத்தியமில்லை. ஐரோப்பியநாட்டாருக்கு அந்நாட்டின் சீதோஷ்ணஸ்திதியானது அவர்கள் செய்யும் பலதொழில்களுக்கு மிகவும் உபகாரமாக இருக்கின்றது. சுகாதார விஷயத்தில் அவர்கள் காட்டும் ஊக்கம் வியக்கத்தக்கது. உலகத்தார் பிரமிக்கும்படியான பல காரியங்களை அந்நாட்டார் இயந்திரங்களின் உதவியால் செய்கின்றனர். லண்டன் நகரத்திலே பூமியின் 60 அடிக்குக் கீழே ரயில் வண்டித்தொடர்கள் ஓடுவதையும், லார்ட்ஸ் சபையார் பேசும்பேச்சுகளை அதே சமயத்தில் [illegible] ஹால் என்று மிடத்தில் எழுதும் [illegible] பறக்கும் இயந்திரத்திலொருவன் ஒன்றேகால் மணி நேரத்தில் தொண்ணூற்று நான்கு மைல் தூரம்பறந்ததையும்பார்க்கும்போது அத்தேசத்தாரின் மகா ஆச்சரியமான புத்தியின் பெருமை விளங்குகின்றது. இயந்திரங்களினுதவியினாலே அத்தேசத்தார் மிகுந்த திரவியக் குவியல்களைத் திரட்டி மகா செல்வவான்களாக விருக்கின்றனர். Duke of Devonshire என்னும் ஓர் பிரபுவின் கோடை வாசஸ்தலத்தில் தினச்செலவு இருநூறு பவுனென்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தலத்தை நாங்கள் பார்த்தோம். அதின் அழகைப்பற்றிச் சுருக்கமாக எழுதினாலும் அது ஓர் பெரும் புத்தகமாய் விடும். இவரைப்போல இன்னும் எத்தனையோ பிரபுக்கள் அத்தேசத்திலிருக்கிறார்கள் அவர்களது செல்வத்தை நோக்குங்கால் நமது நாட்டில் பெரும் பணம் படைத்தவர்களெனக்கருதப் படுவோரது செல்வம் ஓர் அணுவாகத் தோற்றப்படும். இங்கு நான்கு அணாக்குக் கிடைக்கும் கூலியாள் ஒருவனுக்கு இங்கிலாந்தில் நாலுஷிலின் அதாவது மூன்றுரூபாயும் தச்சன்கொத்தனுக்குத் தினம் ஐந்தாறுரூபாயும் கூலி கொடுக்கின்றார்கள். தெருக்குப்பையைக்கூட்டுகிறவன்மாதம்ஒன்றுக்கு அறுபதுரூபாய் முதல் எழுபத்தைந்து ரூபாய் வரை சம்பளம் கொடுக்கப்படுகின்றான். கல்வியும் ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் ஊக்கமும் விடாமுயர்ச்சியுமே அந்நாட்டாரது தற்கால மகோன்னத பதவிக்குக் காரணங்களாகும் உலகத்தில் நாகரீகம் பெற்ற எந்தத்தேசத்திலும் படிப்பு கட்டாயமாக ஏற்பட்டிருக்கின்றது. தெருக்குப்பை கூட்டுபவன்கூட சமாசாரப்பத்திரிகைகளை வாசித்துச்சமயம் வாய்க்கும்போது தேச நடவடிக்கையில் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து வாதாடுகின்றான். ஐர்லண்டு தேசத்திலே கில்லார்னிலேக் என்ற ஒரு ஏரியில் ஒரு போட்டில் ஒரு நாள் ஸாயங்கால வேளையில் எனது சிநேகிதர்களுடன் நான் போய்க்கொண்டிருக்கும் பொழுது அப்போட்டைத் தள்ளுவோன் சொன்ன ஓர் விஷயத்தைக் கேட்கமிகவும் ஆச்சரியமாயிருந்தது. ஐர்லாண்டு தேசத்திற்கு சுவராஜ்ய சுவதந்திரம் வேண்டுமென்று தம்மவர் வெகுகாலமாக வேண்டி வருவதாகவும் அது இப்போதுள்ள லிபரல் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கை உண்டாகி இருப்பதாயும் ஐர்லண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கடற்படையும் தரைப்படையும் தன் சொந்தத்தில்வைத்துக்கொள்ளச்சக்தியில்லாதிருப்பதால் பிரிட்டிஷாரின் சம்பந்தம் எப்போதும் வேண்டுமென்றும்சொன்னான். கேவலம் ஒரு படகு தள்ளுவோனுக்கு தேசநடவடிக்கையில் இவ்வளவு அறிவு ஏற்பட்டிருப்பது கட்டாயப் படிப்பின் பலனாகும். நமது இந்தியாவில் கட்டாயப்படிப்பில்லாமையினால்பெரும் பான்மையோர் எவ்வித ஞானமுமின்றி இருளடையப் பெற்றிருக்கின்றனர். நமது இந்தியா தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் நூற்றிற்கு ஆறுபேர் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களென்றால் கல்வி விஷயத்தில் நமது தேசத்தின் துக்கக்கரமான நிலைமை நன்கு புலப்படும்.

இவ்விஷயமாய்த்தற்காலம் இந்திய சட்டஸபையிலே ஆனரபிள் மிஸ்டர்கோகலேயால் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா சட்டமாகிவிடுமானால் [illegible] கல்வி விஷயத்தில் நமதுதேசம்பெரிதும் மேன்மையடையு மென்பதிற் சந்தேகமில்லை நம் நாட்டுக் கோட்டையாருள் கட்டாயப்படிப்பில்லா விட்டாலும் அதிருப்பதுபோலவே நம்முள் ஆண்பாலர் ஒவ்வொருவரும் படித்திருக்கின்றார்கள். கையெழுத்துப்போடத்தெரியாத தற்குறிகள் நம் ஜாதியாரில் இல்லையென்றேசொல்லலாம். நம்மில்உயர்தரக்கல்விபெற்றோர் பலர் இருப்பினும் பெரும்பான்மையோரின் படிப்பு, பெரும்பாலும் திண்ணைப்பள்ளிக்கூடத்தோடே நின்று விடுகின்றது. அத்திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மட்டிலும் வாசித்த ஒருவரைப்பார்த்து ஆஸ்டிரெலியாதேசம் எந்தத் திசையிலிருக்கிறதென்று கேட்கும் பட்சத்தில் ஆஸ்டிரெலியா என்று ஒருதேசமிருக்கிறதென்றாவது அது இன்ன திசையிலிருக்கிறதென்றாவது சொல்லத் தெரியாது திகைத்து நிற்பார். "தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு."

மணற்றரையிலே தோண்டப்பட்டுள்ள ஓர்கேணியில் அதன் ஆழத்துக்குத் தக்கபடி ஜலமூறுவதுபோல நாம் கற்ற அளவிற்குத்தான் நமக்கு அறிவு ஏற்படுமென்று நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார்.

ஆகையினாலே பூகோளசாஸ்திரமும் தேச சரித்திரங்களும் அவசியம் கற்பித்[illegible] வேண்டும். நாமும் மற்றைய ஜாதி[illegible]ப்போல மேம்பாடடைய வேண்டு[illegible] நமது தமிழ்ப்பாஷையை இன்னும் அதிகமாகக் கற்பதோடு முக்கிய இங்கிலீஷ் பாஷையை நாம் கற்றுக்கொள்ளவேண்டியது இன்றியமையாததாம். இங்கிலீஷ் பாஷையைக் கற்பதினாலுண்டாகும் நன்மைகள் கணக்கிலடங்கா. அது நமது இராஜபாஷையாக இருப்பதோடு உலகத்தில் பெரும்பாலாரால் பேசப்படுவதாகவுமிருக்கிறது. உலகத்தில் எந்தத்தேசத்திற்குப் போனாலும் இங்கிலீஷ்பாஷை பேசுவோரைக் காணலாம். இந்த இங்கிலீஷ்பாஷையை மட்டும் நாம் கற்றிருந்தால் உலகத்தின் எப்பாகத்திலும் யாதொரு கஷ்டமின்றிச் சுற்றுப் பிரயாணம் செய்து வரலாம். சைனா, ஜப்பான் முதலான [illegible]ய நாடுகளில் அத்தேசங்களது [illegible]ன்மெண்டாரே இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து அந்நாட்டுப்பிள்ளைகளுக்கு அப்பாஷையைக் கற்பிக்கின்றனரென்றால் அப்பாஷைக் கேற்பட்டிருக்கும் பெருமையும், அவசியம் தேவையும் நாம் அந்த விஷயத்தில் எவ்வளவு ஊக்கம் காட்டவேண்டுமென்பதும்சொல்லாமலே விளங்கும். வியாபார விஷயத்தில் நாம் சிறிது ஊக்கம் காட்டிவருவதாக நம் சிநேகிதர்களான வக்கீல் [illegible] உத்தியோகஸ்தர் முதலானோரும் [illegible] முறைப்படி இயந்திரங்களை ஸ்தாபித்துப் பல கைத்தொழில்களைச் செய்[illegible]டுமென்று நம்மிற் பல பிரமுகர்களைக் காணும்போதெல்லாம் வற்புறுத்திச்சொல்லுகின்றார்கள். சிற்சில சமயங்களில் அக்காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் நமக்கும் தோன்றுகின்றது. இயந்திரங்களினுதவியினால் பெரும் பொருளீட்டுவது இக்காலத்தில் சாத்தியமேயானாலும் போதுமான கல்வியும் அனுபவமுமில்லாது நூதனத் தொழிலைச் செய்ய எத்தனிப்பது நஷ்டத்திற்கே ஏதுவாகும். [illegible] நாட்டார் ஒரு தொழிலைச் செய்யு[illegible] அதைப்பல வருஷகாலம்பிரயாசைப்பட்டுக் கற்றும்அன்னிய நாடுகளுக்குச் சென்று அதின் மர்மங்களை யறிந்தும் [illegible] பின்னரே அத்தொழிலைச் செய்யத் தொடங்குகின்றனர். போதுமான [illegible]யும் நூதனத் தொழில்களின் [illegible]வங்களையும் நாம் அடையும்வரை, [illegible]துவரை க்ஷேமத்தைக் கொடுத்த [illegible]-தொழில்களையே கைக்கொள்ளு[illegible]வேண்டும். நமது கவனமெல்லாம் [illegible] இங்கிலீஷ் பாஷையை நம் [illegible] அபிவிருத்தி செய்வதிலேயே [illegible]த்தவேண்டும். நமது புராதன [illegible]க்கள் சில நம் கல்வி யபிவிருத்திக்குத் தடையாக நிற்கின்றன. இங்கிலாந்து தேசத்தில் ஆண் பெண் இருபாலரும் பதினான்கு வயதடையுமவரை பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படித்து வரவேண்டுமென்று தேசச்சட்ட மேற்பட்டிருக்கின்றது. நமது ஜாதியாரில் சற்றேறக்குறைய இந்தப் பதினான்கு வயதிலே ஒரு ஸ்திரீக்குக் குழந்தையில்லாவிட்டால் அரச விருக்ஷம் சுற்றுதல், நிர்ஜலவிரதமிருத்தல், சுந்தரகாண்ட பாராயணம் செய்வித்தல், இராமேசுவரம் திருப்பதி முதலான ஸ்தல யாத்திரைகளும் திவ்ய தேச யாத்திரைகளும் செய்தல், இவ்விதமாக மக்கட்பேறு பெறக் கடுந்தவம் புரிகின்றதாக விருக்கின்றது. இதற்கு நம் சீமாட்டிகளே முதற்காரணமாவார்கள். கல்வியாவது நாகரீகப் பழக்கமாவது சிறிதுமில்லாமையின் பலன் தானிது. இங்கிலாந்திலே சுமார் இருபத்தைந்து வயதுடைய ஒரு புருஷனையாவது ஸ்திரீயையாவது உனக்கு விவாகமாய் விட்டதாவென்றுகேட்போமானால் "எனக்கா!" வென்றுஆச்சரியக்குறி காட்டி விவாகம் செய்துகொள்ளத்தக்க வயது இன்னும் வரவில்லையென்று பதில் சொல்லுகின்றார்கள்.

Secure the cage first and then catch the bird என்று இங்கிலீஷிலே பழமொழியொன்றுண்டு. அதற்குக் கூண்டை சம்பாதித்துக்கொண்டு பக்ஷியைப் பிடி என்றர்த்தமாகும். இங்கிலாந்திலே ஒருவன் விவாகமானபின், தன் மாதா பிதாக்களுடனாவது சகோதரர்களுடனாவது ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்கும் வழக்கம் பெரும்பாலுமில்லை. தனக்கென்று தனி இருப்பிடம் சம்பாதித்துக்கொள்ளவும், குடும்ப பாரத்தை ஏற்றுக்கொள்ளவும் ஒருவன் சக்தியுள்ளவனான பின்புதான் விவாகம் செய்து கொள்கிறார்கள். நமக்குள் ஆகவேண்டிய ஆசாரச் சீர் திருத்தங்கள் ஒன்று அல்லது இரண்டு நாள்களிலேயாவது அல்லது ஒரு வருஷம் இரண்டு வருஷங்களிலாவது ஆகமாட்டா. நாம் கல்வியையும் முக்கியமாய்இங்கிலீஷ்பாஷையையும் நம்முள் அபிவிருத்தியடையச் செய்வோமானால், ஆசாரத்திருத்தங்களும், மற்றுமுள்ள நாகரீகங்களும் தானேயுண்டாகும். முக்கியமாய் நாம் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டியதவசியம். நமது ஜாதியார் மேம்பாடடையவேண்டியதற்குத் தற்காலம் நாம் முக்கியமாய்ச் செய்யவேண்டிய காரியம் யாதெனயாரேனுமொருவர் வினவும் பக்ஷத்தில், இங்கிலீஷ் பாஷையை அப்பியஸிப்பதுதானென்று பளிச்சென நான் உறுதியாகப்பதில் சொல்லுவேன். இங்கிலீஷ் பாஷையைக் கற்பதினாலுண்டாகக் கூடிய நன்மைகள் கணக்கிலடங்கமாட்டாவென்று ஏற்கனவே சொன்னேன். அதனால் நாம் நாகரீகத்தையும் வியாபாரப் பெருக்கையும் செல்வ மிகுதியையும் கௌரவத்தையும் அடைந்து மற்றைய வகுப்பாரைப் போல உன்னத பதவிக்கு வரலாம். நம் ஜாதியாரிற் பிரமுகர்களாக உள்ளவர்கள் தங்கள் தங்கள் ஊர்களிலே இங்கிலீஷ் கலாசாலைகளை ஸ்தாபித்து அப்பாஷையைக் கற்பதனாலுண்டாகக்கூடிய பல நன்மைகளைப் பெற்றோர்களுக்குத் தெரிவித்துப்பிள்ளைகளைப் படிக்கச் செய்தல் வேண்டும். ஆரம்பத்தில் எந்த விஷயமும் சிறிது கஷ்டமாகவே தோற்றப்படும். நமது ஜாதியார் மேன்மை யடையவேண்டியதைக்கருதிச் சிறிது ஊக்கமுள்ளவர்களாக விருப்பார்களானால் சொற்ப காலத்திற்குள்ளாக நமது நகரங்களிலே அனேக இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அனேக ஆயிரம் பிள்ளைகளும் அப்பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்களாக விருப்பார்களென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

"குடி செய்வலென்னு மொருவற்குத் தெய்வ மடிதற்றுத் தான் முந்துறும்"

என்று நம் நாயனார் கூறியபடி எமது குடியினையுயரச் செய்யக் கடவேமென்று கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவருக்குத் தெய்வமும் துணையாக முன் வந்து நிற்கும்.

கனவான்களே!

மகா புத்திமான்கள் நிறைந்த இந்த சபையிலே உங்களுக்குத் தெரியாத விஷயங்களை நான் எடுத்துச் சொல்ல வந்ததாகச் சிறிதேனும் கருதக்கூடாது. இக்காலத்தில் எவ்விதப்பெருமை யடைவதற்கும் இங்கிலீஷ் பாஷையை முக்கியமாய் நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றவிஷயத்திலும் மற்றும் நான் சொன்ன விஷயங்களிலும்எனதபிப்பிராயத்தைத்தெரிவித்தேன். பிழைகளேதுமிருப்பின் மன்னித்தல் வேண்டும்,

எங்களைக் கவுரவித்தற் பொருட்டு இங்கு விஜயமாகி யிருக்கின்ற கனவான்களுக்கும் அக்கிராசனத்தை வகித்த நமது Popular டிவிஷனல் ஆபீஸரான மிஸ்டர் நாகசுந்தர மய்யரவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நாங்கள் வந்தனமளிப்பதை அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றோம்.

(இரண்டாம் பக்கத்தின் தொடர்ச்சி.)

மந்திரிக்கு ஆக்ஞாபிக்க, அம்மந்திரியின் ஏவலாற் சென்றோர், சந்யாசியார் சரீரங்கண்டு, காக்குஞ் சீடரைத் தூரத்திவிட்டு, அதி சீக்கிரத்திற் றகிக்கப் புகுந்தார்கள். உடனே சீடர்கள் பதறியோடி அரசமாளிகைப்புறத்தே, பிக்ஷுகர் போலத் தத்துவமசி சொல்லி நெடுநேரம் பாடியும் ராஜ பத்தினிகளுடன் கூடி மகிழுங் கலப்பினால், புறத்தொலி கேட்டிலது. சீடர்கள் மேலும் விரைந்து வாயிலுட் புகுந்து உரத்த சத்தத்துடன் பாடினார்கள். அத்தொனி கேட்டளவே சந்யாசியார் முன்னை ஞாபகம் பெற்று உடனே ராஜ சரீரத்தைவிட்டுச் சென்று, முன் ஏவலராளாற் றகிக்கப்படுகிற சரீரத்திற் புகுந்து,, பழுதுபட்ட சில அவயவங்கள் கடவுள் வழிபாடு முதலிய சகாயத்தாற் பூர்த்தியாகப் பெற்று வந்து, மேற் குறிப்பிட்டாரிடத்தில் சிருங்கார விஷயவாதஞ் செய்து வென்றாரென்று அவரது சரித்திரங் கூறுகின்றது. இது அந்நூல் படித்துணர்ந்தஅம் மாயினரும் பிறரு மறிந்த பிரசித்தமே. இது நிற்க மற்றைச் சந்யாசியார், தமது குரு வாக்கியப்படி காசியில் பற்பல உத்தம தருமங்கள் செய்யக் கருதிச் சென்று, அப்போது அரசனாயிருந்த நவாப்புவைக் கண்டு அவன் தன் அரண்மனையில் இருப்பானுள்ளிருந்த சிங்கத்திமேலேறி யுலாவியிருந்தால் தங் கருத்தை முடிப்பேனென்று கூற, அப்படியே அவ்விருப்பாணைத்தாமே திறந்து அதன் முதுகிலாரோகணித்து அக்காசி நகர் முழுது முலாவி வந்தனர். அது கண்ட அரசன் அவரிடத்துள்ள தெய்வத் தன்மையை மதித்து அத்தியந்த இஷ்டனானன் இப்படியே மேலும்பற்பல அற்புதங்கள் காட்டினர். இஷ்டநோக்கி அவ்வரசன் வேண்டுகோளின்படி அவன் மாளிகையிற் பன்முறை பிரசங்கஞ் செய்து வருவாராயினர். ஒரு தினத்தில் அவ்வரசன் மனைவியர் முதலாயினோர், சிருங்கார விஷயமான பிரசங்கங் கேட்க விரும்புவது அரசன் முகமாகத் தெரிந்து, அச்சிருங்கார விஷயம் அதி விஸ்தாரமாகப் பிரசங்கித்தனர். அது கேட்டிருந்தவர்களிற் சிலர், இவர் பகற் சந்யாசியோ வென்று தம்முள்ளே இரகசியமாப் பேசினர். அச்சந்யாசியார் இதுகண்டு வெளியிடாது, அரசனை நோக்கி களிம்பூறி மிகஅழுக்கேறியுள்ள ஒரு பாத்திரங் கொண்டுவரச்செய்து, அதன் நிறத்தை யாவருக்குங் காட்டிவிட்டு, மல விசர்ச்சனஞ் செய்யுங் கக்கூசில்போட்டு வைக்கச் செய்து, பின் சில தினஞ் சென்று அரண்மனைக்கு வந்து, அரசனை நோக்கி அப்பாத்திரத்தைச் சுத்தி செய்தெடுத்து வாச்சொல்லி, அது வந்தபின் இது முன்னுள்ள நிறமாறி பிரகாசிக்கக் காரணமென்னென்று கேட்டனர். உடனே முன் பகற் சந்யாசி யென்று பேசினவர்களே, மலம் புளிப்புள்ளதாதலாற் களிம்பு நீங்கிவிட்டதென்றனர். அது கேட்ட சந்யாசியார், தாங்கள் தினந்தோறும் எவ்வளவு மலந்தின்று வருகிற வழக்கமென்று கூறிவிட்டு. அரசற்கு முன்னிகழ்ந்தது விளக்கி எப்படி மலம் புளிப்பதென்பது தின்றனுபவத்தறிய வேண்டாது நூலாற்றெரிந்ததோ அது போலச்சிருங்கார விஷயமும் பால சந்யாசியாகிய நான் ஆச்சிரம விரோதமாக அனுபவித்தா அறியவேண்டும். ஏன் சாஸ்திரத்தாலறியப்படாதென்று கூறி உண்மையை வெளியிட்டனரென்று, இவர் சரித்திரங் கூறுகின்றது. இது இவர் சீடர்கள் செய்த நூலினிடமாகத் தெரிந்த பிரசித்தமே. உத்தமர்களாகிய ஐயன்மீர்! இச் சரித்திரங்கள் அவ்விருவரின் சீடர் செய்த நூல்களிலுள்ளனவாதலால் ஒவ்வொன்றும் உண்மையன்றோ? தாங்கள் நடுநிலை நின்று இவ்விருவரின் தாரதரத்தை உள்ளபடி வெளியிட்டு விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

ஓர் வைதிக சைவாபிமானி

பாஞ்சபௌதிகம்.

பஞ்சபூதங்களாவன பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. பிருதுவி = மண். அப்பு = நீர். இந்த ஐந்துங் கலந்த கலவையே உலகம் எனப்படும். இங்ஙனமே தொல்காப்பியரும் "நிலந்தீ நீர்வளி விசும்போடைந்துங் கலந்த மயக்கம் உலகம்" என்பர். மயக்கம் = கலவை. உலகம் மாத்திரமோ, இந்த உடம்பும் இந்தப் பூதங்கள் ஐந்தும் வேறுபட்டுண்டாய கலவையேயாம். உடம்பிலேயுள்ள எலும்பு, தசை, நகம், பல்லு முதலிய கடின பதார்த்தங்களெல்லாம் பிருதுவியின் கூறுகளாகும். சிறுநீர், இரத்தம், சிலேட்டுமம், வேர்வை முதலிய நெகிழ்வுடைப் பதார்த்தங்களெல்லாம் அப்புவின் கூறுகளாகும். நெஞ்சு வறட்சி, உதாக்கினி, காந்தி முதலிய உஷ்ண ரூபங்களெல்லாம் தேயுவின் கூறுகளாம். பிராணன், அபானன் முதலிய வாயுக்களெல்லாம் வாயுவின் கூறுகளாகும். இடை, பிங்கலை முதலிய நாடிகளிலும் மூக்குத் துவாரம் முதலிய துவாரங்களிலுமுள்ள வெளிகளெல்லாம் ஆகாசத்தின் கூறுகளாம்.

இவற்றுள்ளே பிருதுவியாவது நாற்றமுடையது. இது கந்ததன் மாத்திரையினின்று தோற்றியது என்றும், இதன் வடிவு சதுரம் என்றும், இதன் குறி வச்சிரம் என்றும், நாற்றமன்றி மற்றைக் குணங்களு முடையது என்றும், இதன் ஒலி கடகட என்பது என்றும், அதி தெய்வம் பிரமா என்றும் சித்தாந்த நூல்கள் கூறும்.

அப்புவாவது தண்மையான பரிசமுடையது. இது இரசதன் மாத்திரையினின்று தோற்றியது என்றும், இதன் வடிவம் பாதிச் சந்திரன்என்னும், இதன் குறி தாமரைப்பூ என்றும், இதன் குணம் இரசம் முதலியன என்றும், இதன் ஒலி சலசல என்பது என்றும் அதி தெய்வம் விட்டுணு என்றும் சித்தாந்த நூல்கள் கூறும்.

தேயுவாவது வெம்மையான பரிசமுடையது. இது ரூபதன்மாத்திரையினின்று தோன்றியது என்றும், இதன் வடிவம் முக்கோணம் என்றும், இதன் குறி மேழி என்றும், இதன் குணம் ரூபம் முதலியன என்றும், இதன் ஒலி தமதம என்பது என்றும், அதி தெய்வம் உருத்திரன் என்றும் சித்தாந்த நூல்கள் கூறும்.

வாயுவாவது உருவமின்றிப் பரிசமுடையது. இது பரிச தன்மாத்திரையினின்று தோன்றியது என்றும், இதன் வடிவம் அறுகோணம் என்றும், இதன் குறி அறுபுள்ளி என்றும், இதன் ஒலி பகச்சக என்பது என்றும், அதி தெய்வம் மகேசுவரன் என்றும் சித்தாந்த நூல்கள் கூறும்.

ஆகாசமாவது சத்தகுணமுடையது. இது சத்ததன்மாத்திரையினின்று தோன்றியது என்றும், இதன் வடிவம் வட்டம் என்றும், இதன் குறி அமுதவிந்து என்றும், இதற்கு அதி தெய்வம் சதாசிவன் என்றும் சித்தாந்த நூல்கள் கூறும்.

பிருதுவியானது கடினமுடையதாய் எப்பொருளையுந் தாங்கா நிற்கும். அப்புவானது குளிர்ச்சி யுடையதாய் மண்ணுதிகளை இளகச் செய்யும். தேயுவானது உலோகம் முதலியவைகளை உருக்கி ஒன்றுவிக்கும். வாயுவானது அசைவுடையதாய் இலை முதலியவைகளைப் பிரித்தலுங் கூட்டலுஞ் செய்யும். ஆகாசமானது வெளியாய் எவற்றிற்கும் இடங் கொடுக்கும்.

ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியினின்று அப்புவும், அப்புவினின்று பிருதுவியுந் தோன்றின என்று ஏகான்மவாதிகளுள் ஒரு சாரார் கூறுவர். எப்படிக் காரியம் அப்படிக் காரணம்என்னும் நியாயத்தினால் ஆகாசத்திலே ஐந்து குணமும் உண்டெனல் வேண்டும். ஆகையால் அது பொருந்தாது. இங்ஙனம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

The Rates of Subscription.

சந்தா விவரம்.

வருடம் 1க்கு (தபால்கூலியுடன்) ரூ 4—0—0
மாதம் 6க்கு „ 2—4—0
தனிப்புதுப்பிரதி 0—1—6
தனிப்பழையபிரதி 0—2—0
பினங், சிங்கப்பூர், நேட்டால் முதலான வெளியூர்களுக்கு வருடம் 1க்கு (தபால் கூலியுடன்) ரூ 5—0—0
மாதம் 6க்கு மேற்படி 2—12—0

☞ தனவைசியப் பெண்கள், நமது மித்திரனை வாங்கி வாசிக்கவிரும்பினுல், அரைச் சந்தா அதாவது (ரூ 2—0—0) க்கு அனுப்பி வருவோம். தன வைசிய மாணவர்கள் தம் உபாத்தியாயர் தந்த நற்சாக்ஷிப் பத்திரத்தோடு, நமக்கு எழுதினுல், அவர்களுக்கும், அரைச் சந்தாவிற்கு நமது மித்திரனை அனுப்பி வருவோம்.

The Rates of Advertisements.

விளம்பர விகிதம்.

ஒரு பத்திக்கு மீ 1க்கு ரூ 20—0—0
அரைப்பத்திக்கு „ 10—0—0
கால்பத்திக்கு „ 5—0—0
சில்லரை விளம்பரத்திற்கு வரி 1க்கு 0—4—0

நீடித்த காலம் விளம்பரஞ் செய்பவர்களுக்கு மேற்படி விகிதத்தில் சகாயஞ் செய்யப்படும்.

இப்பத்திரிகை வேண்டியவர்களும் அதைப்பற்றிய விவரமறியவிரும்புவோர்களும், அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிக்கொள்ளலாம்.

தேசாபிமானிகளும் பத்திரிகாபிமானிகளும் அவசியம் கவனிக்க வேண்டும்:—

ஒவ்வொரு ஜில்லா, நகரங்களிலும், அவ்வவ்விடத்து, முக்கியமாய் நாட்டுக்கோட்டை தனவைசியர்களைப் பற்றிய வர்த்தமானங்களையும், இதர வர்த்தமானங்களையும், விவரமாய் எழுதியனுப்புவோருக்கு, நமது பத்திரிகை இனமாக அனுப்பப்படும். பத்திரிகைக்கு அருமையான வியாசங்கள் எழுதியனுப்பப்பட்டாலும், அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றியும், விஷயதானஞ் செய்பவர்களுக்கு, அவ்வவ் விஷயநயத்தைக் கவனித்து வேறு வித சகாயங்களும் செய்யப்படும். விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில்கூடிய வரையில் பிழையில்லாதனவாய்த் தெளிவான நடையில் எழுதப்படவேண்டும். விஷயதானஞ் செய்யவிரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதி யனுப்பிக்கொள்ள வேண்டும்.

மானேஜர், "வைசியமித்திரனுபீஸ்," தேவகோட்டை.

Printed and published by S. T. Ramanathan Chettiar, at the Vysiamitran Press, Devakota.

END OF
ISSUE